1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

| 81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு மார்கழிமாதம் 20-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 50-ம் இலக்கம் |
|---|---|---|

# கிறிஸ்மஸ் விழா ஞாபக இதழ்

## பெத்லகேம்

### இன்பமும் — துன்பமும்

— பரிமேலர் எஸ். அருளானந்தம் —

மங்களகரமான நத்தால்பண்டிகை எமக்கு இன்பமாக மிளிர்கின்றது. அழகிய குன்றின் சாரல்கள், ஆட்டு மந்தைகள், தூயவெண்ணிலா, அமைதி நிறைந்த இரா, பிரபைவீசும் நவநட்சத்திரம், வானதூதர்களின் கீதநாதம், நெஞ்சுக்கினிய நல்நெஞ்சு படைத்த ஆயர்கள், செஞ்சுடர்கள் போலும் மூவரசர்கள் — என்னே மனத்தைக் கவரும் ஓர்மனோகர சித்திரக்காட்சி! எங்கும்சோபனம்! எல்லாம்வாழ்த்து!

நிற்க, மறுபக்கத்தை உற்றுநோக்குவோம். மாடாடு ஒதுங்கும் ஓர் குகை. பனியும், கொடுகடியும். சில்லென்றுவீசும் குளிர்காற்று. புல்லணைமேல்உறங்கும் ஓர் பச்சைப்பாலகன். அதன் மெல்லிய மிருதுவான மேனிக்குப் புல்லணை பஞ்சணையாகுமா? சில கால்நடைகளும் அங்கு காணப்படுகின்றன. கன்னிசுத்த தேவதாயாரும், சூசைமாதவரும் அந்தப்பாலகனைப் பணிந்துவணங்கிப் பரமானந்த வெள்ளத்தில் மூழ்கி இருக்கின்றார்கள். மெய்தான்.

ஆனால், அவர்கள் இருவருக்கும் எல்லாம் ஆனந்தகரமாய் இருந்ததா? இதனைச் சற்று ஆராயவேண்டும். ஊன்றிச் சிந்திக்கும்போது, அந்தக் குகையிலே அவர்களுக்கு மோட்ச இன்பத்தோடு உலக துன்பதுயரமும் கலந்தேஇருந்தது. மூவுலகத்தைத் தாங்கும் முதல்வனுக்கு அந்தவேளை ஒருகொட்டில்தானும் கிடைக்கவில்லை. திசையெங்கும் புகழ்பொங்கிய தாவீதுஅரசரின் வங்கிஷபதிக்கு அவர்நகரமாகிய பெத்லகேமில் சத்திரத்தில்தானும் ஒரு மூலைமுடுக்குக் கிடைக்கவில்லை. சகல ஐஸ்வரியங்களையும்ஆக்கியவர் வறுமையால் வாடுகின்றார். "இங்கே உங்களுக்கு இடமில்லை; வேண்டாம், போங்கள்" என்று துரத்திவிட்டார்கள். தற்காலத்திலும் உலகின் பலபாகங்களில யேசு இரட்சகருக்கு இடமே இல்லை என்கிறார்கள். ஐயோ, பெத்லகேமே! உனது மக்கள் யாவரும் சுகமேஉறங்க எல்லோருக்கும் வீடுகள் உண்டு. தேவன் ஒருவருக்குத் தான் உன்னிடம் வீடுஇல்லை. இவ்விதமே சிருட்டிகள் சிருட்டிகர்த்தாவைத் தள்ளிவிட்டன.

இத்தகைய உணர்ச்சிகள் தேவதாயாருடையவும், சூசைமாமுனிவருடையவும் மனதில் நிச்சயமாகவே எழுந்து அவர்களைத் துன்புறுத்தியிருக்குமென்பதில் ஐயமில்லை. எத்தனையெத்தனைவிதமான கடும்பீடைகளால் பரமபிதா தமது திருக்குமாரனை வளர்க்கத் தாம் தெரிந்துகொண்ட தொண்டரை—யேசுகைத்தாதையை — சோதித்தார். பாலகனும், மாதாவும் அனுபவிக்கும் கொடியகஷ்டத்தை அவர்கண்டு அளவிலாத் துன்பத்தில் மூழ்கியிருப்பாரன்றோ! ஆனால், தேவதாயாரும், அவர்பத்தாவும் "எல்லாம் இறைவன் செயல்" என்பதை மனதில்இருத்தி வீரத்துவமிக்க விசுவாசத்துடனும், முழுமன அமரிக்கையுடனும்—ஏன்? — ஞான சந்தோஷத்துடனுமே யாவையும் ஏற்றுக்கொண்டார்கள்.



இவற்றிலிருந்து எவ்வளவோ ஞான திரவியங்களை நாம் நமது சிந்தனையினால் அடையலாம். நத்தால் சுபதினத்தில் தேவமாதாவுக்கும், சூசையப்பருக்கும் இன்பசாகரத்தில் துன்பநீர்கலந்து கிடந்ததுபோலவே நம்மெல்லோர்க்கும் சீவியத்தில் இன்பமும், துன்பமும் கலந்தேயிருக்கும். நன்மனதோடு நாம்அவைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். இன்னும் ஒருவிசேடம் இதில்உண்டு. பெத்லகேமிலே திருக்குடும்பம் துன்பங்கள் யாவையும் ஏற்று, இன்பத்தையே எமக்குத் தரலாயிற்று. எமது சீவியத்திலே பிறர்க்காக நாம்துன்பத்தை அனுபவித்து, அவர்களை மகிழவைத்தல் தேவனுக்கு எவ்வளவு உகந்த காரியம்என்பதையும் நாம் உணர்தல் தகும். துன்பத்தை அனுபவியாது பாலகயேசுவை அரவணைக்க இயலாது. இதைஅவசியம் விளங்க வேண்டும்.

நத்தாலின் அதிஉந்நத சுபசெய்தி என்ன? அதை ஒரேசொல்லில் எழுதுகில் அன்புஎனலாம். அன்பே உருவாய்வந்த அமலனுக்கு எமது அன்பை முற்றாகக்கொடுப்போம். உலகம் அவரை "வேண்டாம், இடமே இல்லை"என்றால் நாம் எமது இதயத்தைத்திறந்து அவரை அதில் இருத்திவிடுவோம். எமது இருதயங்களையே அவர் கேட்கின்றார். அவர் மாதாவும், திருக்கைத்தாதையும் அவருக்குக்கொடுத்தது என்ன? முதல் அன்பு. பரிபூரணஅன்பு. பின்பு அதன்பயனாகநேர்ந்த பரித்தியாகம்.

பாலகயேசு மோட்சமகிமைப் பிரதாபங்கள் யாவையும் ஒதுக்கிவைத்தார். நிசித மானிடவேடம் பூண்டார். நம்மை அரவணைப்பதற்காகப் பிதாவின் அரவணைப்பை விட்டுவந்தார். பாவம்ஒன்றைத் தவிர்த்து மானிடர்க்குள்ள மற்றெல்லாப் பலவீனங்களையும் ஏற்றுக்கொண்டார். பட்சிகளுக்குச் சொகுசான கூடுகள் உண்டு. நரிகளுக்குப் பக்குவமான குகைகள் இருந்தன. எங்கும்நிறைந்த தெய்வத்திற்கு — மனிதகுமாரனுக்கு — தலைசாய்க்க இடமேயில்லை என்னும்படியாக அவ்வளவு பரதேசியானார். எமக்காக முற்றுமே தம்மை வெறுவிலியாக்கி, ஈற்றிலே நம்மை ஈடேற்ற ஈன சிலுவைமரணத்தையும் ஏற்றுக்கொண்டார் சாகவந்த அந்தத் தேவன்!

எமது சீவியத்திலே, இதயங்களிலே எத்தினமும் நத்தால் தினமாயிருக்க நாம் விரும்பினால் எமதுசீவியம் எம்சகோதராராகிய பிறர்மேல் — விசேடமாக ஏழைகள்மேல் நேசம் நிறைந்ததாய் இருத்தல் வேண்டும். அவர்களுக்காக நாம் பரித்தியாகங்களைப் புரியவேண்டும். எமக்காக யேசுஇரட்சகர் தம்மை முழுவதும் பரித்தியாகஞ் செய்தாரே! தியாகம் இல்லாத அன்பு அன்பல்ல. எல்லைகரையற்ற அன்பும், தியாகமுமே நத்தால்.

தமக்கு நத்தால்சோபனம்!

சுபம்! சாந்தி!

---

### வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சி

நிகழும் மார்கழிமாதம் 24-ந் திகதி திங்கட்கிழமை மாலை 5மணி தொடக்கம் 6 மணிவரை "அன்பின் அவதாரம்" என்ற கத்தோலிக்க நாடகம் இலங்கை, வானொலித் தேசியஒலிபரப்பியில் ஒலிபரப்பப்படும். கொழும்பு, மேட்டுத்தெருக் கத்தோலிக்க பாடசாலைகளின் ஆசிரியர், ஆசிரியைகளும், மாணவர், மாணவியரும் இதில் பங்குபற்றுவார்கள். இந்த நிகழ்ச்சி வண. முத்துப்பிள்ளை சுவாமியவர்கள் தலைமையில் நடைபெறும்.

### சேமலாபசங்கம்

நத்தால் – புதுவருட விடுமுறையை முன்னிட்டு யாழ்ப்பாணமேற்றிராசன சேமலாபசங்க காரியாலயம் மார்கழி மாசம் 24-ந்திகதிமத்தியானந்தொடக்கம் 1957-ம்ஆண்டுதைமாசம்2-ந்திகதி முடிகிறவரையிலே மூடப்பட்டிருக்கும்.

### இத்தாலிய அரிசிகிடைக்குமா?

இலங்கைக்கு அவசியமாகத் தேவைப்படும் 15,000தொன் அரிசிவிஷயமாய்ப் பாகிஸ்தானுக்கும், இலங்கைக்குமிடையே தற்போது பேச்சுவார்த்தை நடைபெற்றுவருவதாகத் தெரியவருகிறது. விரைவிலே பாகிஸ்தான் இத்தாலியிடமிருந்து 10,000தொன் அரிசிபெறவிருக்கிறது. இந்தஅரிசி இப்போதுபாகிஸ்தானுக்குத் தேவைப்படாமையால் இந்தஅரிசிக்கப்பல் கொழும்புக்குத் திருப்பப்படக் கூடும்போல் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கரும் சுயாதீனமும்

“எனக்குக்கத்தோலிக்கனுகவா விருப்பமில்லை; ஏனெனில், கத்தோலிக்கருக்குச் சுயாதீனம்இல்லை”—“உங்கள் சமயம் நல்லது; ஆனல், கட்டாயப்படுத்திக் கற்பனைகளை அனுசரிப்பிப்பது ஒருபெரியதவறென்று நான் எண்ணுகிறேன்”— “கத்தோலிக்கசமயம் நல்லது; ஆனல், அது தன்மக்களுக்குப் பூரணசுதந்திரம் கொடுப்பதில்லை”— “அவர்கள் தாங்களாகவே யோசிக்க அவர்களுக்குச் சந்தர்ப்பம்இல்லை”— என்று இவ்வாறெல்லாம் பிறசமயத்தவர்கள் எங்கள்சமயத்தையும், எங்களையும்பற்றிக்கூறக் கேட்டிருக்கிறேம்அல்லவா?

ஏனைய சமயத்தவர்களுக்குப் பல்வேறு பிரமாணங்கள், அனுட்டானங்கள் இருப்பதுபோலக் கத்தோலிக்கனுக்கும் கற்பனைகளும், அனுட்டானங்களும உண்டு. அதனல் அவன் அவைகளை அனுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறன். அவைகளையெல்லாம் அவன் ஏன் அனுசரிக்கவேண்டும்? எதற்காக அனுசரிக்கவேண்டும்? என்பது அவனுக்கு நன்ருகவிளக்கி வற்புறுத்தப்படுகிறது. எங்ஙனம்?

பொலிசார் வீதியோரங்களில் “வலது பக்கத்தால் நட”, “இவ்விடத்தில் மோட்டார்தக் குழலையூதுக”, இவ்விடத்தில் மௌனமாகச் செல்லுக” என்பனபோன்ற பல போக்குவரத்து விதிகளை விளம்பரப் படுத்துகின்றனர். இதன்நோக்கமென்ன? வழிநடக்கும் சனங்களுக்கு (பாதசாரிக்கு) க்கஷ்டம் வருவிக்கவா? மோட்டார்சாரதியை மூடனென்று அவமதிக்கவா? பாதசாரிகளுக்கும், மற்றும் பிரயாணிகளுக்கும் பங்கம் வருவிக்கவா? இல்லை, இல்லை. சகல நடையவும் பாதுகாப்புக்காகவே இச்சட்டங்கள் நடைமுறையிலிருக்கின்றன அவ்வாறே கத்தோலிக்க சமயத்திலுள்ள கற்பனைகளும், அனுட்டானங்களும் விசுவாசிகளின் இரட்சணியத்திற்காகவே வற்புறுத்தப் படுகின்றன.

தந்தைஒருவன் தன் மைந்தனுக்கு “இன்ன இன்ன தோழருடன் சேரக்கூடாது” என்று கட்டளை கொடுக்கும்போது, அதைநாம் அதிகாரத்தனம்என்று தந்தையைக் கண்டிக்கிறேமா? இல்லை. அப்பிள்ளையில் தந்தை கொண்ட அன்பின் அடையாளமாகவே அதனை மதிக்கிறேம்அல்லவா? அதே போல் நமது பாமபிதாவும் எம்மைப் பார்த்து “நீ களவு செய்யாதிருப்பாயாக”, “நீ கொலைசெய்யாதிருப்பாயாக” “நீ பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக”, “நீ பிறர் பொருளை அபேட்சியாதிருப்பாயாக”, “நீ பிறர் மனைவியை இச்சியாதிருப்பாயாக” என்பனவாகப்பலவிதகட்டளைகளை எம் மேலுள்ள அன்பின் நிமித்தமே விதித்திருக்கிறர். சர்வவல்லபகடவுள் அற்ப சிருஷ்டிகளாகிய எம்மீது தம்முடைய அதிகாரத்தைச் செலுத்தும் நோக்கமாக இவ்வாறு பணித்துள்ளார் என்று எந்தமனிதன் தான் நம்பமுடியும்? அல்லது கூறமுடியுமா?

மேலும் ஒருவைத்தியன் தன்னிடம் சிகிச்சைக்குவரும் ஒருநோயாளியைப் பார்த்து, “இன்னஇன்ன மருந்துகளை நீ சாப்பிடவேண்டும்; இன்னஇன்ன நேரத்தில்குறிக்கப்பட்ட இன்னஇன்ன அளவுக்கு அவற்றைச் சாப்பிடவேண்டும்; இன்னஇன்னஉணவுகளை அருந்தவேண்டும்; இன்னஇன்ன உணவுகளை உண்ணுதிருக்கவேண்டும்” என்று கூறுவது வழக்கம். சிலவேளை கூடிய சீக்கிரம் குணமடைவதற்காக அநேக நோயாளிகள் உடலைஒறுத்து, உணவைக்குறைத்துக் கடும்பத்தியம் பிடிக்கிறர்கள் அல்லவா? அதனல் இந்த வைத்தியன் அதிகார வர்க்கத்தினன்; இந்தநோயாளிகள் நிர்மூடர்; சுயாதீனம்இழந்த சர்வமடையர்என்று எவரேனும் கூறுவாரா? இல்லை. அவ்வாறே நமது ஆத்துமவைத்தியரும் நம்முடைய ஆத்துமநோய்கள் அற்றுப்போய் நாம் பூரணசௌக்கியத்துடன் அவர் பாதங்களை அடைவதற்காக நமக்குச்சிறுமலையில் பல்லாயிரம்ஆண்டுகட்குமுன் சில உடன்பாட்டுக் கற்பனைகளையும், சில எதிர்மறைக் கற்பனைகளையும் தந்திருக்கிறர். மனிதன் இரட்சணியம் அடைவதற்கு **அன்றும், இன்றும், என்றும்** இந்தக் கற்பனைகளை அனுசரிக்க வேண்டியவனுயிருக்கிறன்.

ஆகவே, மனிதசுபாவத்தைப் பரிசுத்தமாக்க இந்தக்கற்பனைகள் மிகவும்அத்தியாவசியமானவை. எவ்வளவாக ஒருவன் தேவகற்பனைகளை அனுசரித்துவருகிறனே அவ்வளவாக அவன் ஓர்சிறந்த மனிதனுவான். எவ்வளவாக ஒருவன் அவைகளை மீறிநடக்கிறனே அவ்வளவாக அவன் ஓர்இழிந்தமனிதனுவான்.

மேலும் கத்தோலிக்க திருச்சபை விசுவாசிகளைக்கொண்ட ஓர் கூட்டம். எந்தச்சங்கமும் (ஒருகுடும்பமாய்இருந்தாலென்ன, ஒருசமுகமாய் இருந்தாலென்ன) முன்னேற அச்சங்கங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் சங்கப்பிரமாணங்களை அனுசரிக்கவேண்டியவர்களாய் இருக்கிறர்கள். இலங்கைப்பிரசைகள் இலங்கைஅரசாங்கம் விதித்துள்ள பிரமாணங்களை அனுசரிக்க வேண்டும்அல்லவா? அன்றேல் அவர்கள் நீதிஸ்தலங்களில் நிறுத்தப்பட்டுக் குற்றவாளிகளாகித் தண்டிக்கப்படுவார்கள் அல்லவா? இவ்வாறே நமது சத்திய திருச்சபையின் அபிவிருத்திக்காகவும், அதைச்சேர்ந்தவர்களின்முன்னேற்றத்திற்காகவும் திருச்சபையின் சட்டங்கள்சில இருக்கின்றன. இவைகளை அனுசரிப்பவனே திருச்சபையில் உண்மையான ஒரு அங்கத்தவனுய் இருக்கலாம். அன்றேல் அவனுக்குத் திருச்சபையில் அங்கத்துவம்கிடையாது. ஆனதுபற்றித் திருச்சபையின்கட்டளைகளையும், தேவ கற்பனைகளையும் ஒரேவிதமாக மதித்து, அவற்றிற்கு அமைந்துநடப்பது கத்தோலிக்கர் எல்லோருடையவும் கடமையாகும். இவைகளுக்குஅமைந்துநடத்தல் அறியாமையல்ல, ஆனல், பகுத்தறிவின் அடையாளமாகும். எது செய்யத்தகுமோ (கத்தோலிக்கன் என்ற முறையில்) அதைச் செய்வதுதான் பொருத்தமானது, சிறப்பானது. உள்ளபடியே சிந்தித்துப் பார்ப்போமாகில் தேவசித்தப்படி சன்மார்க்கராய்ச் சீவிப்போருக்குத் தேவகற்பனைகளும், திருச்சபையின்கட்டளைகளும் அவர்களது வாழ்க்கையின் அம்சங்களாகத் தோன்றும். கஷ்டமான கற்பனைகளாகத் தோன்றவே மாட்டா என்க.

— P. S.

## ஆனந்தக் கும்மி

— ‘சாந்தி’ —

யேசு பிறந்தநாள் வந்ததம்மா — எங்கள்
மாசு மறைந்தநாள் வந்ததம்மா
காசினி உண்மையும், நீதியும், சாந்தியும்
கண்டு மகிழ்ந்தநாள் வந்ததம்மா.

●

அன்பு மலர்ந்தநாள் வந்ததம்மா — ஞான
இன்பம் எழுந்தநாள் வந்ததம்மா
துன்ப துயர இருளகன் றெம்வாழ்வில்
தூய்மை புகுந்தநாள் வந்ததம்மா.

●

அன்னை மகிழ்ந்தநாள் வந்ததம்மா — தேவ
கன்னி மகிழ்ந்தநாள் வந்ததம்மா
இன்னலும், பேயும், நரகின் கொடுமையும்
மண்ணில் மடிந்தநாள் வந்ததம்மா.

●

ஆயர் மகிழ்ந்தநாள் வந்ததம்மா — மன்னர்
மூவர் பணிந்தநாள் வந்ததம்மா
தேயமெங் கும்சத்ய வேதம் தழைத்தோங்கத்
தேவன் மலர்ந்தநாள் வந்ததம்மா.

# தனித்து இயங்கும் மந்திரி

(ஓர் அரசியல் நிபுணர்)

பிரதமர் பண்டாரநாயகா இப்பொழுது தனதுமந்திரிசபையில் ஓர் “பிரச்சினைக் குழந்தை” யைக் கொண்டுள்ளார். உணவு-கமத்தொழில் மந்திரியே “அப்பிரச்சினைக் குழந்தை.” முக்கியமாகப் பிரதமர் நாட்டுக்குவெளியே சென்றிருந்தபோது உணவுமந்திரி தனதுமந்திரிசபைச் சகாக்களுடன் கொண்டவிரோதங்களால் உண்டான அவாது, ஒற்றுமையைக் குலைக்கும் போக்குகளே இன்றுபிரதமரை எதிர்நோக்கும் மிகப்பெரியதோர் அரசியல் பிரச்சினையாயிருக்கின்றது.

ஆளும்கட்சிக்குள்ளேயும், மந்திரிசபைக்குள்ளேயும் நிலவும்உறவைப் பொறுத்தவரையிலே இப்பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும்போது, உணவுமந்திரி கிளப்பியுள்ள பகிரங்கதகாறுகளாலும் அரசாங்கத்துக்குச் சங்கடம் உண்டாகியிருக்கிறது.

திரு. பிலிப் குணவர்த்தனவின் மனப்போக்கு ஜனநாயகமுறைப்படி தெரிவுசெய்யப்பட்டதானஒருஅரசாங்கம ஏற்றுக்கொண்டுள்ள கொள்கைகளுக்கு மேன்மேலும் முரணுகிவருகிறது. தனது சொந்தஅரசியல்நலன்களை வளர்ப்பதற்குத் தன்னுடையமந்திரிபதவியைப் பயன்படுத்திக்கொள்ள அவர்பூண்டுள்ள திடசங்கல்பத்தைக் காலவரையறையின்றி அனுமதிக்கமுடியாது. ஏனெனில், இம்மனப்போக்கினல் அரசாங்கத்தின் ஜனநாயகத்தன்மையே குலைந்துவிடும். உணவுமந்திரியின் மனப்போக்கு ஜனநாயகத்துக்கு எத்துணைமுரணுக இருக்கிறதென்பது அன்று அவர் சனப்பிரதிநிதிகள்சபையில் ஒருகேள்விக்குப் பதிலளித்தபோது வெளியாயிற்று. பத்திரிகைச்சுதந்திரத்தின்மீது அவர்நடத்திய தாக்குதலைப்பற்றி அவரிடம் கேள்விகேட்கப்பட்டபோது, அவர் ஒருஜனநாயக அரசாங்கத்தின் அங்கத்தினரென்ற முறையில் தனதுசெயல்களுக்குரிய நியாயமானகாரணங்களை எடுத்துக்கூறியிருக்கவேண்டும். ஆனல், அவர் இந்த மூலாதாரகடமையை அலட்சியஞ்செய்துவிட்டார்.

திரு. பிலிப் குணவர்த்தன எவ்விதத்திலும் எத்தகையநியாயங்களையும் எடுத்துக்காட்டியிருக்க முடியாதென்பதுஉண்மை. அவர் லேக்ஹவுஸ்பத்திரிகைகளுக்கு அரசாங்கவிளம்பரங்களை நிறுத்தியசெயல் முதலாவதாகக் கண்டிக்கப்பட்டதிலிருந்தே அவர் தனது நடவடிக்கைக்கு ஆதாரவானஆதாரங்களைப் பெருக்கமுயல்வதற்காக விரிவானஆராய்ச்சியில் ஈடுபட்டுவந்திருக்கிறர். ஆனல், இறுதியில் தனது செயலுக்குரிய நியாயத்தை எடுத்துக்காட்டமுயல்வதைக் குறைத்துக்கொள்வதே மேலானதென்பதை அவர்கண்டுகொண்டார். “இல்லை” என்று சர்வாதிகாரத்தொனியில் பதிலளிப்பதிலேயே அவர் புகலிடம்தேடிக்கொண்டார்.

தனது சொந்தசெயல்கள் மூலம் உணவுமந்திரி ஆளும்கட்சிக்குள்ளே எவ்வளவுதூரம் தன்னைமற்றவர்களிடமிருந்து தனியாகப்பிரித்துக்கொண்டு வருகிறர்என்பதற்கான சான்றுகள் சமீபத்தில்நடைபெற்ற விப்ளவகாரலங்காசமசமாசக் கட்சியின் இரகசியக்கூட்டம் ஒன்றிலிருந்து கிடைக்கின்றன. இக்கூட்டத்தைப்பற்றிக் கிடைத்த நம்பத்தக்கசெய்திகளின்படி, நேர்மைக்கும், உண்மைக்கும் பிரசித்திபெற்ற மந்திரிஒருவரும், பாராளுமன்ற காரியதரிசிஒருவரும் “இப்பொழுது நீங்கள் இருக்கும்நிலைமைக்கு உங்கள்மீதே குறைகூறிக்கொள்ள வேண்டும்” என்று அக்கூட்டத்தில் உணவுமந்திரிக்குத் தெளிவாக்கியதாகத் தெரியவருகிறது. “அதிகாரத்துக்குவர ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு நீங்கள்உதவிசெய்தீர்கள்; புதியஅரசாங்கம் அமைக்கப்பட்டபின் நீங்கள் நவலங்காசமசமாசக்கட்

(அடுத்தபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறைவாசஞ் செய்யும் கருதினல்

போலிஷ்கருதினலான விசின்ஸ்கிஆண்டவர் சிறையிலிருந்து விடுதலைசெய்யப்பெற்றுச் சுதந்திரமாக இன்றுவாழுகின்ருர். ஹங்கேரியகருதினலான மின்ட்ஸென்ரி ஆண்டவர் தேசியபுரட்சிக்காரராலே சிறையினின்று விடுவிக்கப்பெற்றும் சுதந்திரமற்றவராய்ப் புடாபெஸ்ற்நகரிலுள்ள அமெரிக்கதூதுவர் காரியாலயத்தில் அடைக்கலம்புகுந்து இன்றும் அங்குதானே இருந்துவருகின்ருர். ஆனுல், மற்ருேர்கருதினல் இன்னுமே சிறைவாசஞ் செய்துவருகின்ருர். இவர் மாஷல்ரிற்ருேவின் கம்யூனிஸ்தஆட்சி நடைபெற்றுவரும் யூகோசிலேவிய நாட்டின்கருதினலான ஸ்ரிபினக் ஆண்டவரே. கருதினல்மின்ட்ஸென்ரி ஆண்டவரைப்போல் இவரையும்விடுதலையாக்கமுயற்சி நடைபெறக்கூடுமென்ற அச்சங்காரணமாக அவர் தமதுமனையிலேயே சிறைவைக்கப்பட்டிருக்கும் இடமாகிய கிருசிக் எனும் கிராமத்துக்கு யூகோசிலேவிய அதிகாரிகளால் படைவீரர்கள் அனுப்பிவைக்கப் பட்டிருக்கிருர்கள். போலிஷ்கருதினலும், ஹங்கேரியகருதினலும் விடுதலையாக்கப் பட்டுவிட்டார்களென்ற செய்திஎட்டியதும் யூகோசிலேவிய கம்யூனிஸ்தஅதிகாரிகள் அவசரகூட்டங்கூடி ஆலோசித்துக் கருதினல்ஸ்ரிபினக்ஆண்டவருக்குக் காவல்போடத் தீர்மானித்தார்கள்.

## போலிஷ் கருதினல் பேசுகின்ருர்

இற்றைக்கு மூன்று வருடங்களின்முன் தாம் கைதுசெய்யப்பட்டபிறகு அன்றுஞாயிற்றுக்கிழமை கருதினல் விசின்ஸ்கிஆண்டவர் வார்சோநகர திருச்சிலுவைக் கோவிலிலே தமது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முழந்தாட்படிதானும் இடமுடியாது அத்துணைபெரும் நெருக்கமாகக் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான போலிஷ்மக்களை நோக்கி முதன்முறையாகப் பேசியபோது போலாந்துக்கு வீரத்துவசேவை அருளவேண்டியதன் ஆவசியகத்தைப்பற்றித் தெரிவித்துநின்ருர். "ஓர்புதிய ஒழுங்குமுறைஅமைப்புக்காக நடைபெற்றுவரும் போராட்டத்தைக் கருத்தூன்றிநாம் கவனித்துவருகிருேம்; சுதந்திரத்தையும், நீதியையும், விருப்பத்தையும்தெரிவித்துக்கொள்வதற்கான மனிதஉரிமைகள் திரும்பவும்அருளப்படவேண்டும்; உள்நாட்டிலே மக்கள் ஒருங்குதிரள்வதினுலும், அன்பினுல் எல்லோரையும் ஐக்கியப்படுத்துவதினுலும் திருச்சபையின்தொண்டுகள் பலன்தருமென நம்பிக்கையளிக்கும் மகிழ்ச்சிக்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன; போலாந்திலே திருச்சபை கடந்தவருடங்களிலே முன்பின் கேள்விப்பட்டிராத பெருந்துன்பங்களை அனுபவித்திருந்தபோதிலும் எல்லாவற்றையும் அது மன்னித்தும், மறந்தும்விட்டது; இந்தஇருபதாம்நூற்ருண்டு சரித்திரத்திலே அதிகம் இருள்சூழ்ந்த காலங்களில் ஒன்ருகும்; உலகமுழுவதிலுமுள்ள அநேகமான பொதுஸ்தாபனங்களாலே மனிதனின் தனியுரிமைகளும், பொதுஉரிமைகளும் இகழ்ந்து புறக்கணிக்கப்படுவதே இந்த நூற்ருண்டின் மிகமோசமான நடைமுறையாகும்" என்றும் அவர்கூறிநின்ருர்.

## பத்துவருட கம்யூனிஸ்த ஆட்சி

ஹங்கேரியிலே சோவியற்படைகளின் குரூர அட்டூழியங்களைச் சகிக்கவாற்ருது அங்கிருந்தும் தங்கள்உயிரையுங்கொண்டு தப்பியோடி ஆஸ்திரியாவில் அடைக்கலம்புகுந்த பல்லாயிரக்கணக்கான ஹங்கேரிய அகதிகளின் பரிதாபநிலைமையைப் பற்றியும், அவர்களிடமிருந்து கேட்டறிந்தவைகளையும் இதற்கென்று ஆஸ்திரியாவுக்கு அனுப்பிவைக்கப்பெற்ற வண. ஆக்னெல் லுஸ் அன்ட்று சுவாமியார் பின்வருமாறு தெரிவிக்கின்ருர். "ஹங்கேரியிலே பத்துவருடகால கம்யூனிஸ்த வேதகலாபனையால் அந்நாட்டுமக்களிடையே திருச்சபையின்வெளிவேலைகள் ஏறக்குறைய முற்ருக ஒழிக்கப்பட்டுவிட்டன. கத்தோலிக்க சமூக இயக்கமும், யுவர்கள்இயக்கமும், கத்தோலிக்க கலாசார சபைகள் முழுவதும் முற்ருக அடக்கியொடுக்கி அகற்றப்பட்டுவிட்டன. கோவில்களுக்குச்சென்று கடவுளை வழிபடுவதிலே திருச்சபைக்கு அதிகமதிகம் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. கத்தோலிக்க ஆடவன்ஒருவன் கோவிலுக்குப் போகவிரும்பினுல் வேலைக்குத் துண்டுவிழுகிறது. அவன் சேர்ந்துள்ள தொழிற்சங்கம் அவனுக்கு மாருக மறைமுகமான நிர்ப்பந்தங்கள் விதிக்கின்றது. அதனுல், அரசியற்புரட்சிக்கலகத்தில் இறங்கியவர்கள் செய்துகொண்ட முதல் வேலைகள் கருதினல்மின்ட்ஸென்ரி ஆண்டவரைச் சிறையினின்று விடுவித்ததும், சமயவழிபாட்டுச் சுதந்திரம்கேட்டமையுமேயாகும். கருதினல்ஆண்டவர் அதிகங்களைகொண்ட ஓர்பெரும் விருத்தாப்பியரைப்போல் தோற்றியதாக அவரைக்கண்ணுரக்கண்ட அகதிகள் தெரிவித்துள்ளார்கள். ஹங்கேரியைவிட்டு வெளிகொண்ட அகதிகளில் ஏறக்குறைய நூற்றுக்குத் 90 விகிதமானேரும் கத்தோலிக்கரேயென மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஏனையவர்கள் கல்வீன், லுத்தேர், கிரேக்க பிரிவினைச் சபைகளைச் சேர்ந்தவர்கள். இந்தஅகதிகளின் பரிதாபகரமான நிலைமையோ தாங்கமுடியாத மனவேதனையைத் தருவதாகும்."

## சாந்தி மலர்ந்தது

—:—

**நேரிசை வெண்பா**

செந்தேன் அமுதுகனி சேர்ந்ததிருப் போதனைகள்
தந்தமலர் வாயைத் தரிசிப்போம் — கந்தைதனில்
வத்துபிறந்து மரிமடியிற் கண்ணயருஞ்
சுந்தரமெய்த் தேவைத் தொழுது.

❀

குட்டம் குருடுபிணி கூனர்களை அன்பொழுகத்
தொட்டுச் சுகமீந்த துய்யகரம் — பட்டுருவி
ஆணி தொளைத்த அருங்கரங்கள் அக்குகையிற்
காணுவோம் அன்பிற் கனிந்து.

❀

வானேர் அமுதாய் வளர்ந்ததிரு மன்னவே!
தானே யிறங்கித் தரணிதனில் — மானிடரை
விண்ணேர்க ளாக்க விளங்கு மனுவுருவாய்
நண்ணும் புதுமை நவில்.

❀

எண்ணும் பவமார் எருசலைக்காய் நீருகுத்த
வண்ணப் புதுமலராய் வாய்ந்தசிறு — கண்ணிரண்டும்
மின்னு மழகை மிகக்கூர்ந்து பார்த்திடவே
மன்னி எழுவோம் மகிழ்ந்து.

❀

ஏழை துயரகல ஈனர் பவமிரிய
நாளும் நடந்திளைத்த நல்லடிகள் — பாழும்
இருப்பாணி யேறும் இணையடிகள் காண
விருப்போடு வாரீர் விரைந்து.

❀

யுத்த நெருப்பில் உலகங் கருகுமென்றே
எத்தினமும் அச்சம் எழும்புவதேன் — பெத்தலையில்
சாந்தி, சமாதானம், சாவகற்றுஞ் சஞ்சீவி
மாந்த ரிடைமலர்ந்த போது.

❀

பக்தர்க ளாக்கிப் பவவுலகில் ஆவியிலே
செத்தோரை மீட்கும் சிசுவிதனைச் — சுத்தர்களுந்
தேவ கணமுந் தெரிசிக்கும் நாளினிலே
மேவுவோம் நாமும் விரைந்து.

— முத்து

## தனித்து இயங்கும்மந்திரி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சியையும், கம்யூனிஸ்தகட்சியையும் நிந்தித்துப்பேசத் தொடங்கினீர்கள்; ஆனுல், உங்கள்சொந்தச்செயல்களால் உங்களை இப்போது தேவையில்லையென்று நீக்கக்கூடிய ஒருநிலைமையை நீங்களே சிருஷ்டித்திருக்கிறீர்கள்" என்று அவர்கள் அவரிடம்தெரிவித்ததாகச் சொல்லப்படுகிறது.

"இப்போதுநீங்கள் சிருஷ்டித்துள்ள நிலைமையில் ஆளும்கட்சிக்குள்ளே நீண்டநாள் நீங்கள் தங்கியிருக்கவோ, அல்லது அதைவிட்டுவெளியேறவோ முடியாதஒருநிலைமை உங்களுக்கு உண்டாகியுள்ளது" என்று அவர்கள் அவருக்குச் சுட்டிக்காட்டியதாகத் தெரியவருகிறது.

அவர் அரசாங்கத்திலிருந்து வெளியேற்றப்படின், அவரால் எங்குபோகமுடியுமென்று அவர்கள்கேட்டனர். நவலங்கா சமசமாசக்கட்சிக்கோ அல்லது கம்யூனிஸ்த கட்சிக்கோ அவர் போகமுடியாது. ஏனென்ருல், அவர் இக்கட்சிகளை முற்ருக விரோதித்துக் கொண்டுள்ளார். திரு. பிலிப்குணவர்த்தனவைப் பின்பற்றி அரசியல்வனுந்தரத்துள் தாங்கள் செல்வார்களென்று எதிர்பார்க்கமுடியாதென ஒரு மந்திரியும், உதவிமந்திரியும் தெளிவாக்கியதாகச் சொல்லப்படுகிறது. விப்ளவகார லங்கா சமசமாசக்கட்சியைச் சேர்ந்த ஒற்றைப்பாராளுமன்றப் பிரதிநிதியும் தனது மௌனத்தின் மூலம் இதே மனோபாவத்தைக் காட்டியதாகக் கூறப்படுகிறது.

## அர்ச். பிரகாசியம்மாள் திருநாள்

சென்ற 4-12-56 பிற்பகல் 5மணிக்கு கொடியேற்றத்துடன் நவநாள்உற்சவம் ஆரம்பமாகியது. தினசரி மாலை 6 மணிக்குச் செபமாலையின்பின் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டு வந்தது. 12-ந் திகதி 7 மணிக்குச் செபமாலையின்பின் வண. எல். அந்தோனிப்பிள்ளை சுவாமியவர்கள் பிரகாசியம்மாளின் சீவியசரித்திரத்தையும் அதிலிருந்து கிறீஸ்துவர்களாகிய நாம் வேதவிசுவாசம், பரிசுத்தகற்புஎன்னும் மேலான புண்ணியங்களைக் கடைப்பிடித்தொழுகவேண்டிய தன்மையையும்பற்றி ஓர் அரிய பிரசங்கஞ்செய்தார். பின்னர் இருகுருவர்உதவிபுரிய வண. ஏ. உக்கின் சுவாமியவர்களால் வேஸ்பர்பாடித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. 13-ந்திகதி காலை 7-30 மணிக்குத் திருநாள்பாடற்பூசையின்பின் பிரகாசியம்மாள் திருச்சுரூபம் பாவோசை, செபவோசை, மத்தியிலே பயபக்தியுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டுத் திருச்சுரூப ஆசீர்வாதத்துடன் திருநாள் முடிபெய்தியது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்கழி மாதம்

**பொதுக்கருத்து:** வேதகலாபனையால் துன்புறுவோர் பொய்யும், புரட்டுமான வாக்குறுதிகளால் ஏமாந்து, தங்கள்விசுவாசத்தில் வழுவாதிருக்குமாறு வேண்டிக் கொள்வது.

**மிஷன்கருத்து:** ஆபிரிக்காவிலே கத்தோலிக்க பாடசாலைகளுக்காக மன்ருடிக்கொள்வது.


சத்தியவேத

# பாதுகாவலன்

1956-ம் ஆண்டு

மார்கழிமாதம் 20-ந் திகதி





தேவகிருபையினுலும்

பரிசுத்தஸ்தானத்தின் தயவினுலும்

யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய

**ஜெரேம் எமிலியானுஸ்பிள்ளை**

ஆகிய நாம்

நமது மேற்றிராசனத்தைச்சேர்ந்த சகல குருமாருக்கும், விசுவாசிகளுக்கும்

சுபமும்,

கர்த்தரில் ஆசீர்வாதமும் கூறி

## விடுக்கும் திருமுகம்

நமதுஅருமையான வண. குருப்பிரசாதிகளே, மிகவும்பிரியமான பிள்ளைகளே!

யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் தேவஅழைத்தல் பெருகும்படியாக ஒருவருட செபமும்தபமும் இற்றைக்குப்பன்னிருமாதங்களின் முன்தொடங்கினேம். நாம் செய்த விசேஷசெபம் முடிவடைந்தாலும் நமதுமேற்றிராசனத்தில் ஊழியம்புரிவதற்குப் பரிசுத்தகுருமாரையும், பக்தியுள்ளசந்நியாசர், கன்னியாஸ்திரிமாரையும் அதிகமதிகமாகச் சர்வேசுரன் தரவேண்டுமென்ற கருத்திற்காக எமது நாளாந்தசெபத்தில் தொடர்ந்து மன்ருடிவருவோமாக.

அறுவடையோ உள்ளபடியே மிகஅதிகமாய் இருக்கின்றது. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒருதொகையான புதியவிசாரணைப்பங்குகள் இருக்கின்றன. நமது கத்தோலிக்க மக்களின் பக்திவேகமானது அவர்களின் ஞானதேவைகளை அதிகம்அடிக்கடி விசாரணைசெய்ய வேண்டிய அவசியத்தை வேண்டிநிற்கின்றது. தேவதொண்டு அதிகரித்தபோதிலும்தேவதொண்டர்களோ மிகவும் குறைவாகிவிட்டார்கள். நமது குருமார் மிதமிஞ்சியவிதமாக வேலைகொள்ளப்படுவது உண்மையாய் இருந்தபோதிலும், இன்னும்அதிகமான ஆத்தும இரட்சணிய வாஞ்சைமிக்க அப்போஸ்தலர்கள் இல்லாக்குறைவாலே அதிகவேலை இன்னும்முற்றுப்பெருதிருக்கின்றது.

எமது மடுத்தாயார் எம்மன்ருட்டுகளுக்கு இரங்கித் தெரிதலான குருத்துவப்பாதையை நாடும்படி இளைஞர்கள்சிலரை ஏவியிருக்கிருர். இன்னும் அநேகர் தேவைப்படுகிருர்கள். ஆகையாற்ருன் கடந்தபன்னிரண்டுமாதங்களாக நமதுமேற்றிராசனத்தின் பல்வேறு கோணங்களிலும் அழைத்தலுக்காகச்செய்த வேண்டுதலை இன்னுந்தொடர்ந்து தனித்தும், கூடுமானல் பிரசித்தமாயும் செய்துவருவோம். தேவ அழைத்தலுக்காகச் செபிக்கும் வழக்கத்தைஇன்னும்தொடர்ந்து அனுசரித்துப் பழகுவதற்கு உதவியாக,

**மருதமடுச் செபமாலைமாதாவே! எங்கள்மத்தியில் பரிசுத்தரான தேவதொண்டர்கள் அதிகரிக்கச் செய்தருளும்** என்னும் செபத்தைச் சொல்லிவருவோருக்கு நூறுநாட் பலன் அருளுகிருேம்.

அடுத்துவரும் மாசிமாதம் 4-ந் திகதியன்று நமதுஆசனக்கோவிலிலே எமதுகுருத்துவமாணவரில் ஒருவரைக் குருத்துவஅபிஷேகஞ் செய்யும் சந்தர்ப்பத்தைத் தேவன் எமக்குத் தந்திருக்கிருர். தேவ அழைத்தலின் ஆண்டும் இத்தினத்துடன்தான் முடிவடையும். ஆகவே, சங். பிறதர் தேவராஜா மாசிமாதம் 4-ந்திகதி குருத்துவ அபிஷேகம் செய்யப்பெறும்வரையும் எமதுபிரசித்தவேண்டுதலும், கட்டளைச்செபமும் (Oratio Imperata) தொடர்ந்து நடைபெறவேண்டுமென இத்தால்அறிவிக்கிருேம். குருத்துவாபிஷேகத்துக்குச் சமுகந்தந்து, அபிஷேகத் திருச்சடங்குகளில் பங்குபற்றச் செய்வதற்காகப் பாடசாலைகளிலும், மற்றும் கல்வித்தாபனங்களிலுமுள்ள மாணவர்களை அழைத்துவர இது ஓர்நல்ல தருணமென வண. குருமாருக்கும், ஆசிரியருக்கும், பெற்ருேருக்கும் சிபாரிசுசெய்ய விரும்புகிருேம். அப்படிச்செய்வது அழைத்தல்வருடத்துக்கு ஓர்முடிசூட்டியதுபோல் இருக்கும். இத்திருச்சடங்கில் மாணவர்கள்பங்குபற்றச்செய்வது அவர்கள்மனதில் அழைத்தலுக்கு வித்திட ஓர் தருணமாகவும் கூடும்.

உங்கள் விசாரணைப்பங்கிலே குருமடத்தில்சேரவிரும்பும் மாணவர்களின்பெயர்களைக் கூடியசீக்கிரம் சென் மாட்டீன்குருமடத்தலைவருக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிருேம்.

வண. குருப்பிரசாதிகளே! மிகவும்பிரியமான சகோதரரே! உங்கள்எல்லோருக்கும் நத்தார்ச்சுபசோபனங்கூறி, புதிய ஆண்டில் தேவபாலனின் ஆசியைவிரும்பி, அவைகளுக்கு அச்சாரமாக உங்கள்அனைவரையும் மனப்பூர்வமாய் ஆசீர்வதிக்கிருேம்.

தேவதிருப்பாலனில் உங்களன்புள்ள

✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O.M.I.

யாழ்ப்பாண மேற்றிராணியார்

குறிப்பு:

இந்தநிருபத்தை அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை எமதுமேற்றிராசனத்திலுள்ள சகல கோவில்களிலும், சிற்ருலயங்களிலும் வாசித்து விளங்கப்படுத்தவேண்டியது.

## நத்தால் பண்டிகை

சமாதானத்தை ஆசித்துத் தேடியும், மகாநாடுகள்கூடியும் அதனைக்கண்டடையும் வகையறியாது தவித்துக் கலங்குகின்றது இன்றையஉலகம். யுத்ததிகிலும், அரசியற்புரட்சியும், சுதந்திர மறுப்பும், நாஸ்திகஇயக்கமும் அதனை வளைந்துகொண்டிருக்கும் அபாயகரமான ஓர்நிலைமையிலே சமாதானத்தின்இளவரசர் மற்றுமோர்தரம் அதன்மத்தியில் ஞானவிதமாகப் பிறக்கப்போகின்ருர். அவரின்திருஜனனத்தை ஞாபகப்படுத்துவதான நத்தால்பண்டிகை மற்றுமோர்தரம் வருகின்றது. அதன்மனேகரமான சுபசெய்தி— இதோ! எல்லாச்சனத்துக்கும் மகாசந்தோஷத்தை வருவிப்பதான சுபசெய்தி — மற்றுமோர்தரம் நமதுஇதயங்களிலே தொனிக்கின்றது. "அஃதுயாதெனில், இன்று தாவீதன் நகரத்தில் கிறீஸ்துநாதராகிய இரட்சகர் உங்களுக்காகப் பிறந்திருக்கின்ருர்" என்பதே.

அம்மட்டா! "உந்நதஸ்தலங்களிலே சர்வேசுரனுக்குமகிமையும், பூலோகத்திலே நன்மனதுள்ளமனுஷருக்குச் சமாதானமும் உண்டாகக்கடவது" என்று வானுலகசேனை அந்தச்சாமத்திலே சர்வேசுரனைத் துதித்துப் பாடினகீதமும், கூறியசமாதானமும் ஆதியனவெல்லாம் கடவுளை மறந்து — அவரைமகிமைப்படுத்துவதை மறந்து, நன்மனம்என்பது இல்லாது, அதனுல்சமாதானங்கண்டுகொள்ளாது அதற்காக அல்லும்பகலும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் மனுக்குலத்தின் மத்தியிலே மற்றுமோர்தரம் அழுத்தமாகத் தொனிக்கின்றன. ஆனுல், அவற்றிற்குச் செவிகொடாதகாரணமாக மனிதவர்க்கம் ஆசிக்கின்றசமாதானம் முயற்கொம்பாகவே இருக்கின்றது.

அன்று முதலாவது நத்தால் பண்டிகையின்போது தேவதாயாருக்கும், சூசைமாதவருக்கும், இன்னுமேஅவதரியாத திருக்குழந்தை யேசுவுக்கும் பெத்லகேம்நகரின்கதவுகள் பூட்டப்பட்டமைபோன்றே இன்றும் அகிலமுழுவதிலும் எத்தனையோ ஆயிரக்கணக்கான நகர்களின் கதவுகள் — கதவுகளாகியஇதயங்கள் பூட்டப்பட்டிருக்கின்றன. அதாவது குழந்தையேசுவை — உலகின்இரட்சாமூர்த்தியை — அவரதுசற்போதனையை — உத்தம மாதிரிகையை அவைகள் புறத்தே ஒதுக்கிவிட்டிருக்கின்றன. அதனுல் கிறீஸ்துநாதர் இல்லாமலே கிறிஸ்மஸ்எனப்படும் நத்தால் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

உலகத்திலே இதுகாலவரை எத்தனையோ மணிமாடங்களிலும், அழகியமாளிகைகளிலும் பிறந்த கோடிக்கணக்கான குழந்தைகளை உலகம்மறந்துவிட்டது. ஆனுல், ஒருமாட்டுத்தொழுவத்தில்பிறந்த குழந்தைஒன்றின் பிறப்பை — கிறீஸ்துநாதரின் திருஜனனத்தைச் சுமார்இரண்டாயிரம் வருடங்களாக உலகம் ஞாபகப்படுத்தி வருகின்றது, அப்போதெல்லாம் இரட்சகர் உங்களுக்காகப் பிறந்திருக்கிருர்; நன்மனதுள்ளவர்களுக்கே சமாதானம்என்ற நத்தால்சுபசெய்தி மீளவும் பிறந்துகொண்டேயிருக்கிறது. அதனுல் நத்தால்காலம் சமாதானத்துக்கும், சந்தோஷத்துக்குமுரிய ஓர்காலம். தேவபாலன் பிறந்தபோது இடையர்களுக்குத்தேவதூதனின் சுபசெய்தியையும், வானசேனையின் சோபனகீதத்தையும் ஞாபகத்தில் கொணர்ந்து நாமும் இச்சுபகாலத்திலே நமது சந்தாதாரர்களுக்கும், அன்பர்களுக்கும், நிருபர்களுக்கும் சுகமும், கர்த்தரிலே ஆசீர்வாதமும் விரும்பி நத்தால் சோபனம் கூறுகின்றேம்.




## சவேரியாரும் புரோகிதரும்

பற்பல அற்புதங்களைப்புரிந்த சவேரியாரின் நற்போதனைகளைப் பாதகுலமக்கள் மனமுவந்து வரவேற்றனர். அவரின்போதனைப்படி விக்கிரக ஆராதனையை விலக்கியதோடமையாது விக்கிரகங்களையும் நிர்மூலமாக்கி நிர்மல தேவனை வழிபடமுன்வந்தனர். நாட்டு மக்களின் நன்மனதையும், உற்சாகத்தையும்கண்ட சவேரியார் அவர்களின் விசுவாசத்தை ஸ்திரப்படுத்தச் சலியாது சேவைசெய்தார். நகரின் பற்பலபகுதிகளிலும் சென்று வேதசத்தியங்களை விரித்துரைத்துச் சந்தேகங்களை நிவிர்த்திசெய்து வெதுவெதுப்பான உள்ளங்களில் வேகமான பக்தியருட்சியை உண்டுபண்ணிவிட்டார். சிறுவர்கள்மட்டில் அதிகம்கரிசனை கொண்டு அவர்களை ஒருங்குதிரட்டி ஞானேபதேசம்கற்பித்த, நற்கிதங்களைப்பயிற்றி, அவர்களின் வருங்கால வாழ்க்கையை வளப்படுத்தினுர். இவற்றுடனமையாது தமது முன்மாதிரிகையான சீவியத்தாலும், தற்பரித்தியாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிகைகளாலும் பிறமதத்தவர்களின் மனதைக்கவர்ந்து அநேகரை நமது அருள்மறையில் சேர்த்தார்.

சவேரியாரின் சிறந்தசேவை புரோகிதர்களின்உள்ளத்தில் பெருந் திகிலை உண்டாக்கியது. நாட்டுமக்களிடையே தமக்கிருந்தசெல்வாக்கு அற்றுப்போகாதுகாக்க வழிவகைகளைக் கையாண்டார்கள். சவேரியாரிடம் தங்கள்நிலைபாத்தை உணர்த்தினார்கள். அவர் போதிக்கும் உண்மையானதேவனைத் தாங்கள் ஏற்றுக்கொள்வதாகக் கூறினார்கள். ஆனால், விக்கிரகங்கள்மூலமே தங்கள் வாழ்க்கைக்கிரயத்தைத் தேடிக்கொள்வதால் அவற்றைக்கைவிட முடியாதென்று குறிப்பிட்டுத் தங்கள் தப்பிதகொள்கைகளை அம்பலப்படுத்தாதிருக்கும்படி பரிவுடன்வேண்டினர். ஆனால், சவேரியார் தாம்செல்லுமிடமெல்லாம் அவர்களின் தப்பிதகொள்கைகளைக் கண்டித்தேவந்தார். அதனால் சவேரியாருக்கும், புரோகிதர்களுக்குமிடையில் வாக்குவாதங்கள் எழுந்தன. நித்திய சம்பாவனையைப்பற்றித தர்க்கித்தபொழுது புரோகிதர்கள் பின்வருமாறு குறிப்பிட்டனர். தங்கள் மதக்கொள்கையின்படி நித்தியசம்பாவனையைச் சம்பாதித்துக்கொள்ள அகத்தியமான இருகருமங்களுண்டு. அவையாவன: பசுவைக் கொல்லாதொழிதலும், புரோகிதர்களைச் சங்கைபண்ணிச் சன்மானம் வழங்குவதுமெனக் குறிப்பிட்டார்கள். இதைக்கேட்டு வியப்பும், ஆத்திரமுமடைந்த சவேரியார் அவர்களதுகொள்கைகளின் தப்பிதங்களை அவர்களுக்கு விளக்கிக்காட்டி, விசுவாசப்பிரமாணங்களையும், மோட்சம் நரகம் முதலியவைகளையும், சர்வேசுரனுடைய கற்பனைகளையும்பற்றி விளங்கப்படுத்தி நித்திய சம்பாவனையைச் சுதந்தரித்துக் கொள்ள அமலன்காட்டிய வழியைக் கடைப்பிடிக்கும்படி அவர்களைத்தூண்டினார். ஆனால், புரோகிதர்கள் அவரின்போதனையை ஏற்றுக்கொண்டபோதிலும், அவர்காட்டியவழியைப் பின்பற்றப் பின்வாங்கினார்கள். தாங்கள் அனுசரிக்கும்மறையைக் கைநெகிழ்ந்தால் மக்கள் தங்களை ஏளனம் செய்வார்களென்றும், தங்கள் வாழ்க்கைவருவாயை இழக்கநேருமென்றும் எண்ணி வாளாவிருந்தனர்.

— நல்லூர்

---

● "நேற்றோ" எனப்படும் வட அத்திலாந்திக் ஒப்பந்தநாடுகள் ஸ்தாபனத்தின் போர்வல்லமையை அதிகரிக்கச் செய்யுமாறு நவீன அணுச்சக்தி ஆயுதங்களிலே சிலவற்றின் இரகசியங்களை நேசநாடுகளுக்குவழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது. வட அத்திலாந்திக் பாதுகாப்புஒப்பந்த ஆலோசனைச்சபையில்பேசிய அமெரிக்கபாதுகாப்புமந்திரி திரு. சாள்ஸ் வில்சன் இதனைவெளியிட்டிருக்கிறார்.

● உலகில் மகாப்பெரியதெனநம்பப்படுகின்ற கத்தோலிக்க உயர்தரகலாசாலைஒன்று ஐக்கிய அமெரிக்கதேச பிலடெல்பியாநகரிலே சமீபத்தில் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. 33 வருடகாலம் அந்நகர் அதிமேற்றிராணியாராக விளங்கியிருந்த கருதினல் டகேட்ரி ஆண்டவரின் நாமத்தையே இது சூடியுள்ளது. தனது 112 வகுப்பறைகளிலும் இது 6,000 மாணவருக்குப் போதிய இடவசதியைக் கொண்டுள்ளது.

# சுதேச வர்த்தமானம்

—:—

## ஒருகண்ணுக்கு நஷ்டஈடு

இந்திய அரசாங்கவங்கியில் ஓர்லிகிதரான திரு. எஸ். பொர்ஹான்எனும் வாலிபர் சென்றவருடம் சித்திரை மாதம் 24-ந்திகதியன்று குளியாப்பிட்டியிலுள்ள ஓர்கம்பெனியைச்சேர்ந்த திரு. ரி. ஜி. ஈ. பெர்ணண்டோவுக்குச் சொந்தமானகாரில் பிரயாணஞ்செய்தபோது, அந்தக்கார் கொழும்பிலே ஓர் சந்தியில் திரும் கார் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாயிற்று. அதனால் தனதுகண்ஒன்றின் பார்வையை இழந்துவிட்டமையாலே தனக்குப் பதினையாயிரம்ரூபா நஷ்டஈடு கொடுக்குமாறு கேட்டு அந்த வாலிபர் காரின் சொந்தக்காரரான திரு. பெர்ணண்டோ மீது தொடர்ந்தவழக்கு கொழும்பு டிஸ்திறிக்கோட்டில் விசாரணைசெய்யப்பட்டு, முடிவில் நஷ்டஈடாக வழக்காளிக்குப் பதினையாயிரம் ரூபாவும், அத்துடன் வழக்குச்செலவும கொடுபடவேண்டுமென்று தீர்ப்பாயிருக்கிறது.

## கொழும்பு முனிசிப்பல்சபை

கொழும்பு முனிசிப்பல்சபைத் தேர்தல் சென்ற 15-ந்திகதி சனிக்கிழமை நடந்தேறியது. இத்தேர்தலிலே அதன் 31 வட்டாரங்களிலும் 18 வட்டாரங்களுக்கு ஐக்கியதேசியக் கட்சி அபேட்சகர்கள் தெரியப்பட்டுப் பெரும் வெற்றி ஈட்டியிருக்கின்றார்கள். ஏனைய கட்சிகளிலே மக்கள் ஐக்கியமுன்னணிக் கட்சி அபேட்சகர்கள் 5வட்டாரங்களிலும், லங்கா சமசமாசகட்சி அபேட்சகர்கள் 3வட்டாரங்களிலும், கம்யூனிஸ்தகட்சி அபேட்சகர்கள் 2வட்டாரங்களிலும், சுயேச்சைவாதிகள் 3வட்டாரங்களிலும் தெரியப்பட்டிருக்கிறார்கள். இத்தேர்தலின்முடிபாய் ஐக்கியதேசியக்கட்சி மிகப்பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப்பற்றிக்கொண்டது. லங்கா சமசமாசகட்சியின் இருபெருந் தலைவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். முன்னர் எந்தஒருதேர்தலிலும் தோற்கடிக்கப்படாத டக்றர் என். எம். பெரேரு இந்தத்தேர்தலிற்தான் முதன் முறையாகத் தோல்வியடைந்தார். இவருடன் திரு. றொபேட் குணவர்த்தனவும் தோல்வியடைந்தார். பாராளுமன்ற அங்கத்தவர்களிலே இத்தேர்தலில் அபேட்சகர்களாகப் போட்டியிட்டுநின்ற டக்றர் என். எம். பெரேரு, திரு. றொபேட் குணவர்த்தன, திரு. அனில் முனசிங்கா, திரு. லெஸ்லி குணவர்த்தன, திருமதி விவியன் குணவர்த்தன (ஐவரும் லங்காசமசமாசகட்சியைச்சேர்ந்தவர்கள்) திரு. எம். எஸ். தேமிஸ் (மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சி) எனும்ஆறுபேர் தோல்வியடைந்துள்ளார்கள். மக்கள் ஐக்கியமுன்னணிக்கட்சி அபேட்சகர்களிலே வெற்றிபெற்றஜவம் திரு. பிலிப் குணவர்த்தனவின் சமசமாசகட்சியைச் சேர்ந்தவர்களே. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகர்களிலும், தொழிற்கட்சி அபேட்சகர்களிலும் எவருமே வெற்றிபெறவில்லை.

## கைதடிக் குருடர்பாடசாலை

கைதடியிலே நான்குஏக்கர் நிலத்தில்கட்டிய பத்துவீடுகளையும் அங்குள்ள நபீல்ட் குருடர்–செவிடர் பாடசாலைக்கு அரசாங்க சமூகசேவைப் பகுதி வழங்கியிருக்கிறது. இந்தவீடுகளைக் கட்டிமுடிக்க அரசாங்கத்துக்கு முப்பதினாயிரம்ரூபா செலவாயிற்று. இந்தத்தொகையை இருபதுவருடத் தவணையில் இப்பாடசாலை அரசாங்கத்துக்குச் செலுத்தித்தீரும். சமூக சேவை உதவித்தலைவரான திரு. எஸ். இரத்தினசிங்கம்அவர்கள் கைதடியிலுள்ள குருடர்–செவிடர்பாடசாலையையும், அரசாங்க வயோதிகர்சாலையையும் பார்வையிட்டு, அவர்கள்செய்துவரும்வேலைகளைப் பாராட்டியிருக்கின்றார்.

## கடுதாசித் தொழிற்சாலை

வாழைச்சேனையில் 2கோடியே 20 லட்சம்ரூபாசெலவில் கட்டப்பட்டுள்ள கடுதாசித்தொழிற்சாலையைக் கைத்தொழில்மந்திரி திரு. பி. எச். வில்லியம் டிசில்வா வருகிறதைமாதத்தின் இரண்டாவதுவாரத்தில் திறந்துவைப்பாரெனத் தெரியவருகிறது. அதுமுதல் இத்தொழிற்சாலை எழுதுதற்கும், அச்சிடுவதற்குமான கடுதாசிகளைத் தொடர்ந்து செய்துவருமெனச் சொல்லப்படுகிறது. இத்தொழிற்சாலையை நடத்த ஏற்படுஞ்செலவுக்கென்று கைத்தொழில்மந்திரி அரசாங்கத்தினிடம் பத்துலட்சம்ரூபா மானியம் கேட்கவிருக்கின்றார். கற்குடாப் பிரதிநிதியாயிருந்த திரு. வி. நல்லையா அவர்களின் முயற்சியால் வாழைச்சேனையிலே இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டது. அங்கு இதனை அமைப்பதைத் தற்போதையகல்விமந்திரி திரு. டபிள்யு. தஹநாயகா அப்போது பலமாகக் கண்டித்தார்என்பது ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

---

புத்தக மதிப்புரை

# ஆரம்பக்கல்வி உளநூலும் கற்பித்தலும்

ஆக்கியோன்:
பி. சவரிமுத்து,
M. A., Dip. Ed., F. C. P.
பிரசுரம்:
கத்தோலிக்க அனாத அச்சியந்திரசாலை,
மட்டக்களப்பு.
விலை: ரூபா 4-00.

இது குழந்தைகளின் நூற்றாண்டு குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்ப்பது, கல்விபுகட்டுவது என்பனகுறித்துப் புதிய புதிய கொள்கைகள் எழுந்துள்ளன. மேனாட்டார் இத்துறைகளில் புத்தம்புதிய ஆராய்ச்சிகள் நடத்தியதின்காரணமாக மேனாடுகளிலே கல்வித்துறையில் பெரியமாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. குழந்தைகளின் இயல்பூக்கங்களையும், பற்றுக்களையும் துணையாகக் கொண்டு கல்விபுகட்டுவது மிகவுஞ்சுளுவான முறைஎன்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆயின் அத்தகைய போதனாமுறைக்கு உளநூல் அறிவு நிரம்பவும்தேவை. இவ்வுளநூல் கருத்துக்கள்குறித்தும், அவற்றைப் பயன்படுத்தும் முறைகள்குறித்தும் இந்நூலிலே ஆசிரியர் தமது பேரனுபவத்தையும், பேரறிவையும் துணைக்கொண்டு தெளிவாக விளக்கியுள்ளார். பரந்துபட்ட இவ்விஷயத்தை இருபது அதிகாரங்களில் அடக்கி, இனிமையும், தெளிவும் அமைய விளக்கியுள்ளதிறம் ஆசிரியரது கல்வி நூற்புலமையைக் காட்டுவதாகும். தமிழ்மொழியில் இதுவரையும் இதுபோன்ற பொருளடக்கம் நிறைந்த 'கல்விநூல்' வெளிவந்ததில்லை. உளநூற்புலவர் [illegible]. எஸ். அருள்நந்தி அவர்கள் இதன் அணிந்துரையிற் கூறுமாப்போல், இந்நூல் பயிற்சிபெறுகின்ற ஆசிரியர்க்கு மாத்திரமன்றி, ஏனைய ஆசிரியர்க்கும் பெரும்பயன்தரவல்லதாகும். எனவே, ஆக்கியோன் நூன்முகத்தில் கூறுமாப்போல் இந்நூல் சிறப்பாக ஆசிரிய உலகிற்கும், பொதுவாகக் கல்விவளர்ச்சியில் கருத்துள்ளஎல்லாருக்கும் ஓர் அரிய பூஷணமாகும் என்பதில் எட்டுணையும ஐயமில்லை. எமக்கு அனுப்பிய பிரதிக்காக எமது நன்றி.

---

# திருக்குறட் கலண்டர்

யாழ்ப்பாணம், விவேகானந்த அச்சகம் வழமைபோலப் புத்தாண்டு வாழ்த்துடனும், அழகுப்பொலிவுடனும் பிரசுரஞ்செய்து வெளியிட்டிருக்கும் 1957-ம் ஆண்டுக்கான **விவேகானந்தா திருக்குறட் கலண்டர்** வரப்பெற்றேம். இந்தக்கலண்டரிலே தினசரியாக அந்தந்த நாளுக்குரிய ஒவ்வோர்இதழிலும் ஆங்கில, தமிழ், முஸ்லீம் வருடம், மாதம், திகதிகள் ஆகியன ஆங்கிலம், தமிழ், சிங்களம் என்னும் முப்பாஷைகளிலும் தரப்பட்டிருக்கின்றன. இன்னும் அந்தந்தக் குறித்த திகதியில்வருகின்ற கத்தோலிக்கசமய கடன்திருநாட்களும், மற்றும் அநேக பிரதான திருநாட்களும், யாத்திரைப் பதிகளின் மகோற்சவதினங்களும், அவ்வாறே மற்றுஞ் சமயத்தவர்களின் மகோற்சவதினங்கள் ஆதியனவும், மற்றும் அரசாங்க விடுமுறைநாட்கள், அமாவாசை, பௌரணை, அட்டமித் தினங்கள் ஆதியனவும், இன்னும் ஒவ்வோர் திகதிஇதழிலும் திருவள்ளுவர் குறளில் அர்த்தபுஷ்டியான ஒவ்வோர் குறட்பாவும், புத்திபோதனை நிறைந்த ஒவ்வோர் நன்னெறிச் சுலோகமும் தரப்பட்டிருக்கின்றன. மேலும், கவர்ச்சிகரமும், பலவினமுமானபடங்கள் இந்தக்கலண்டருடன் இணைக்கப்பட்டு, இல்லங்களை அழகுபடுத்தக் கூடியவகையிலே காட்சியளிக்கின்றன. முன்னர்போன்று இந்தக்கலண்டரையும் அத்துணைசிறப்பாக அச்சேற்றி வெளியிட்டதற்காக விவேகானந்தஅச்சகம் மக்களின்பாராட்டுதலைப் பெறத் தகுந்ததே. இத்துடன் வரப்பெற்ற "விவேகானந்தா டயறி" யும் தபால், தந்தி விகிதங்கள், சமயதிருநாட்கள், அரசாங்க-வங்கிவிடுமுறைநாட்கள் ஆதியனபற்றிய விபரங்களைக்கொண்டதாகலின் எவர்க்குமே ஆவசியகம்தேவைப்படுவதொன்றாகும். யாழ்ப்பாணம், பெரியகடையிலுள்ள விவேகானந்த அச்சகத்திலும், விவேகானந்த புத்தகசாலையிலும் இவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றேம்.

---

## நன்றியறிந்த தோத்திரம்

திருஇருதயத்தின் இரக்கத்தினாலும், சதாசகாயமாதாவின் தயவினாலும், அர்ச். அந்தோனியாரின் உதவியினாலும என்னுடைய வருத்தங்களிலெல்லாம் நாளுக்குநாள் சுகம் கிடைக்கிறது. இன்னும் பூரணசுகம் கிடைக்கவேண்டுமென்று இரந்துமன்றாடுகிறேன். திடனேடும். நல்லவிசுவாசத்தோடும் இருக்கவேண்டுமென்று இரக்கமுள்ள தேவனைக் கெஞ்சிக்கேட்கிறேன். இந்தக் கிருபையை எனக்கு அடைந்துதந்தருளப் பிரார்த்திக்கிறேன். நான் எண்ணியபடி பிரசுரிக்கிறேன்.

J. S.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை விடுதாது

( ஒரு நத்தால் சரிதை )

மார்கழி மாதம். மாழும் கொடு கொடுக்கும் காலம். பட்டினத்தின் கடைவீதிகள் எல்லாம் கொள்வனவு விற்பனவுசெய்வோரின் ஆரவாரம். காரணம், அன்று நத்தால் திருநாளுக்கு முந்தியதினம். எல்லோரின் இதயங்களிலும் ஒருவித அக்களிப்பும், ஆனந்தமும் குடிகொண்டிருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது. பலரும் சந்தோஷமாகத் தத்தம்இல்லஞ்சென்று கொண்டிருந்தார்கள். இஃது இப்படியிருக்க, அப்பட்டினத்தின் ஒரு பாகத்தில் இருளடைந்த ஒருதெருவோரத்தில் ஒருசிறு குடிசை. அதில் குடியிருந்தவர்கள் பரமஏழைகள்என்பதை எவருங் காணக்கூடியதாகவிருந்தது. அறையோ மிகவுஞ் சிறியது. சுவர்களோ தூசுபடிந்திருந்தன. தளமோ கிடங்கும்முடங்கும். அறையில் ஆனதளபாடங்கள் இல்லை. மூலையொன்றில் ஒருகுப்பிவிளக்குமின்னிக்கொண்டிருந்தது.

அறையின்ஒருபுறத்தில் தாயும், பிள்ளைகளும் ஒருவரைஒருவர் கட்டிப் பிடித்துக்கொண்டிருந்தார்கள், குளிர் தாங்கமுடியாததினுல ஆக்கும். கடைசிப்பிள்ளை கைக்குழந்தை. அதை மடியில்வைத்துத் தாலாட்டிய தாயின் முகத்தில் கவலையும், கலக்கமும் குடிகொண்டிருந்தன. பசியாற்துடிக்கும் தன்பிள்ளைகளுக்கு எங்கிருந்து ஆகாரங்கிடைக்கப் போகிறதோஎன்று அவள் சிந்தித்துக்கொண்டிருந்தாள். பிள்ளைகளின் முகத்தைப்பார்க்க அவள் வயிற்றில் நெருப்பைஅள்ளிக் கொட்டியதுபோல இருந்தது. கண்களில் இருந்து கண்ணீர் ஆறுகஓடியது. தன் நிலைபரத்தை யோசித்தாள். அந்த நாளிலே அவள்பணக்காரியாக இராவிட்டாலும் அன்றுடைய தேவைகளுக்குப் போதுமானவருவாய் கிடைத்ததையும், திருப்தியும், சந்தோஷமுமான குடும்பவாழ்க்கை நடத்திவந்ததையும் சிந்தித்தாள். திடீர் என்று ஒருநாள் அவள்கணவன் ஓர்விபத்தில் அகப்பட்டு இறந்துபோஞன். அன்று தொட்டு வறுமை அவளை மணந்து கொண்டது. அவளும், பிள்ளைகளும் பசிப்பிணியால் வாடவும், மனிதவர்க்கம் வசிக்கமுடியாத அக்குடிசையில் வதியவும் நேர்ந்தது. ஒருவேளைப் போசனத்துக்கும் சிலவேளைகளில் அந்தரிக்கவேண்டியிருந்தது.

அன்று நத்தால் ஆயத்ததினம். அதைப் பிள்ளைகளுக்கு நினைவூட்டப் புதுஉடுப்புகளோ, பட்டாசோ, பகல்வெற்றியோ, பலூஞே ஒன்றும்இல்லை. அதிகமேன்? அன்று சாப்பிடுவதற்கே ஒன்றுமில்லை. அன்னையின் துயரை என்னவென்று சொல்வது? அழுதுதான் பயன்என்ன? நொந்துதான் பயன் என்ன? ஆவது ஒன்றுமில்லை என்று முடிவுகட்டிக்கொண்டு பிச்சையென்ருலும் எடுத்துப் பிள்ளைகளுக்கு உணவுகொடுக்க வேண்டுமென்று வெளிக்கிளம்பத் தீர்மானித்தாள். தன் கைக்குழந்தையை ஓர்பழையகம்பளித் துணியால்சுற்றிக் கொண்டு, மற்றப் பிள்ளைகளை மூத்தபிள்ளையிடம் பார்த்துக்கொள்ளும்படி ஒப்படைத்துவிட்டு இரவானதும் வீட்டைவிட்டுப் புறப்பட்டாள் தாய்.

எங்குபோவதெனத் தெரியாது திகைத்தாள். பிச்சையெடுத்துப் பழக்கமேயில்லை. தைரியத்தைக் கைவிடாது, பணக்காரர்வதியும் வீடுகள் இருக்கும பக்கமாகச்சென்று ஒவ்வொரு கதவிலுந்தட்டிப் பிச்சைகேட்டாள். வீட்டினுள் இருப்போரின் ஆரவாரமும், சந்தோஷமும், கொலுகொலுப்பும், சிரிப்பும் கண்களுக்கும், காதுகளுக்கும் எட்டின. கதவுகளைத் திறந்தார்கள். பரதேசித் தாயையும், பிள்ளையையும் பார்த்தார்கள். குலுங்க நகைத்தார்கள். சடார்என்று கதவுகளைப் பூட்டினுர்கள். சந்தோஷங் கொண்டாடும் இச்சுபதினத்தில் ஏழை பரதேசிகளுக்கு இரக்கங் காண்பிக்க இவர்களுக்கு நேரங்கிடைக்கவில்லைப் போலும்!

பசியாலும், நடந்தகளையாலும் வாடிவதங்கிய ஏழைத்தாய் மனமடிவு கொண்டாள். இனிஎன்னசெய்வோம் தெய்வமே! என்றுநினைந்து வீடுதிரும்ப யோசித்தாள். யோசித்துவிட்டுப் போகும்வழியில் ஒருவீடு தென்பட்டது. இரண்டொருவெளிச்சங்கள் அவ்வீட்டில்காணப்பட்டன. ஆரவாரமொன்றும் இல்லை. சிலவேளை இவ் வீட்டிலென்ருலுந் தனக்கு பிச்சை கிடைக்கக் கூடுமென எண்ணிச் சற்று மனமகிழ்ந்தாள். கதவண்டைசென்று நெஞ்சுபடபடக்கப் பயப்பிராந்தியோடு தட்டினுள். ஓர்வேலையாள்வந்து கதவைத்திறந்தபோது, அறையின் ஒரு பாகத்தில் ஓர்வயதுபோன துரைமகன் நிற்பதைக் கண்டுகொண்டாள்.

"உனக்கு இங்கே என்னஅலுவல்? ஏன் இங்கேவந்தாய்? உனக்கு என்ன வேணும்?" என்று கடுகடுத்தகுரலில் அந்தத்துரைமகன் வாயிலிருந்து கேள்விகள்பிறந்தன.

"ஐயா! மன்னிக்கவும். என்வீட்டில் குழந்தைகள் பசியாற்தவிக்கிருர்கள்; ஏதோபணஉதவியோ, அன்றேல் பொருள்உதவியோ செய்து அவர்களைக் காப்பாற்றுங்கள் ஐயா!" என்று தாழ்மையாகக் கெஞ்சிக்கேட்டாள்.

"பிச்சைக்காரிபோல் நடிக்கும் இன்னுருத்தியா நீ? உன்புருஷன் உங்கள்தேவைகளைப் பூர்த்திசெய்ய உழைப்பதில்லையா? நல்லமனிதர் தொல்லையின்றியிருக்க விடமாட்டீர்களா? வீணுக ஏன்எங்களைத் தொந்தரவுபடுத்துகிருய்?" என்ருன் துரைமகன்.

"ஐயா! என்புருஷன் இறந்துவிட்டார்; தயவுசெய்து என்மேல்இரங்கி, என்மேல் அல்ல, என்குழந்தைகள்மேல் இரங்கி இன்றுநாம் கொண்டாடும் குழந்தையேசுவின் பிறப்பை நினைத்தென்ருலும் என்பிள்ளைகளுக்குக் கொஞ்சஉணவு கொடுங்கள்" என்று கண்களில்நீர்ததும்பக் கெஞ்சிமன்ருடினுள்.

துரைமகனின்முகஞ் சிவந்தது. "எந்தக்குழந்தையிலும் எனக்கு அக்கறையில்லை; இவ்விடத்தைவிட்டு வெளியேபோ" என்று கடிந்துரைத்தான். கையிலிருந்தகுழந்தை அருண்டது. பசியாலும், குளிராலும் வாடிய குழந்தை வீரிட்டுக்கத்தியது. அவள் அதைச் சாந்தியாக்கிவிட்டுக் கோபத்துடன் அங்கு நின்றுகொண்டிருந்த துரைமகனை இரக்கப்பார்வையுடன் நோக்கினுள்.

"வெளியேபோ என்று நான் உனக்குச்சொன்னது கேட்கவில்லையா?" என்ருன். கதவைப் படார்என்று சாத்தினுன். அவளும் பரிதாபகோலத்துடன் ஈனஇரக்கமில்லாத இந்தஉலகத்தில் சீவிக்கவேண்டிவந்ததே எனத் தன்னையே நொந்துகொண்டு வெளியே சென்ருள்.

துரைமகன் தான்உட்கார்ந்திருந்த சொகுசான சார்மனைக்கதிரையின் பக்கஞ்சென்ருன். தான்வாசித்துக்கொண்டிருந்த புத்தகத்தைத் திரும்பவும் கையில்எடுத்தான். ஆனால், வாசிக்க முடியவில்லை. அவன்மனதில் ஏதோ குழப்பம் ஏற்பட்டது. குழந்தையேசுவைப்பற்றி இந்தஏழைமனுஷி என்ன சொன்னுள்? அந்தபெயர் அவன் ஞாபகத்துக்கு வந்தது. பலவருடங்களுக்குமுன் தன்தாய் இந்தப்பெயரை அவனுக்குச்சொல்லிக்கொடுத்திருந்தாள். தன்குழந்தைப்பருவத்தை நினைவுகூர்ந்தான்.

குழந்தையேசுவைப்பற்றியும், அவரின்திருத்தாயார் கன்னிமரியாயைப் பற்றியும், அவ்ரின்கைத்தாதையாம் அர்ச். சூசையப்பரைப்பற்றியும் தன்னுடையதாய் தனக்குச்சொல்லிக் கொடுத்த சம்பவங்களும், கதைகளும் அவன் நினைவுக்கு வந்தன. யேசுநாதரின் போதகங்களிற்சிலவும் அவன்மனக்கண்ணிற் தோன்றின. "சின்னஞ்சிறியவர்களாகிய என்சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் செய்தபோதெல்லாம் எனக்கேசெய்தீர்கள்" என்ற வார்த்தைகள் அவன்ஞாபகத்துக்கு வந்தன.

இன்னுஞ்சிந்தித்தான். குழந்தையேசு பிறந்தஇரவு இன்றுதான்என்று அந்தப்பிச்சைக்காரி கூறினுள். அவர் ஏன்பிறந்தார்என்று தன்தாய் கூறியதும் அவன்நினைவுக்குவந்தது. "சகல மனிதரையும் இரட்சிக்க அவர் பிறந்தார்." அப்போது தலைகுனிந்து தியானித்தான்.

"மனமகிழ்வோடே அனைவரும்வாரும்
வாரும், வாரும்
பெத்லகேம் ஊருக்கு ..."

என்று பாடகர்கள்வெளியே பாடிச் சென்ற கீர்த்தனம் அவன் காதில் பட்டது.

எத்தனையோ வருடங்களின்பின் முதன்முதலாக அன்றுகாலை அந்தத் துரைமகன் கோவிலுக்குப்போனுன். ஆராதனை ஆரம்பமாகிவிட்டது.. மெதுவாகப்பின்னுல் இருந்த வாங்குஒன்றில் அமர்ந்தான். அவனுக்குப்பக்கத்தில் அன்றுஇரவு அவன் தனதுவீட்டால் துரத்திய பிச்சைக்காரியும், பிள்ளைகளும் இருக்கக்கண்டான். சந்தோஷங் கொண்டான். ஆராதனைமுடிந்ததும் தனது இரக்கமற்ற நடத்தைக்குப்பரிகாரமாக அவளுக்கு உதவிசெய்ய வேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டான். இது நடந்தது "அன்றுஇரா" இன்று அவனுக்குப் "புதுநாள்."

தன்தலையிலே கைகளைவைத்துக் கொண்டு மனஸ்தாபப்பட்டான். கண்ணீர்த்துளிகள் சொட்டுச்சொட்டாக வீழ்ந்தன. குழந்தையேசுவின் சமாதானம் அவன்ஆத்துமத்தில் குடிகொண்டது. பாடகர்குழாத்துடன் சேர்ந்து அவனும்

"வாரும் வணங்குவோமே
வாரும் வணங்குவோமே
வாரும் வணங்குவோமே பாலனை"

என்று வாயாரமனமார வாழ்த்திப்பாடினுன்.

# பெத்லேகம் சிற்றூரில்

— ஜெயம் —

கார்தவழும் மலைமுகட்டிற் பொன்தடவிப் பந்துக்
கதிரவன்தன் மேல்வீட்டிற் கண்ணயரச் சென்ருன்
நீர்தவழும் பொய்கையெலாங் கமலங்கள் தேங்கி
நிரைநிரையாய்க் கைகூப்பி நின்றனவான் பார்த்து
ஏர்தவழும் வயற்கரையில் மரகதப்புல் காட்டி
இடையர்களும் மந்தையுடன் எதிர்பார்த்து நின்ருர்
சீர்தவழும் பெத்லேகம் சிற்றூரில் அன்று
சிறுகுருவிக் குஞ்சுகளுங் கண்மூட வில்லை.

கோடுயர்ந்த மரக்கிளையின் கூடுகளைச் சுற்றிக்
கொடிமுல்லை விளக்கேற்றிப் பறவையினங் கூடிப்
பாடிநின்ற இன்னிசைகள் பனிமுத்துக் கோத்துப்
பளபளென ஒளிவீசும் படிசெய்ய வேண்டிக்
காடுயர்ந்த செடிகளெலாங் கட்டின வெண்ணுரம்
காரிருளைக் கிழித்ததுமின் தாரகையுங் கீழே
பீடுயர்ந்த பெத்லேகம் சிற்றூரி லன்று
பெருகியதோ ரானந்தக் கரையற்ற வெள்ளம்.

எல்லையிலா வான்வெளியிற் சோதியெழில் கொஞ்ச
இன்னிசையும் பண்ணிசையுங் கூடியொலி பொங்கத்
தொல்லைவினை மாசகலத் தூய்மைநிறை தங்கத்
துயிலுணர்ந்து மன்பதைகள் நிலையுணர்ந் திலங்க
நல்லவர்கள் மனமகிழச் சாந்திமணங் கமழ
நவகோடி தூதர்கணம் இசைபாடி யேத்த
வெல்லையிலே கன்னிமரி விண்ணவனைத் தந்தாள்
வெந்துயரம் பூமியிலே விடைபெற்ற தம்மா!

---

றெயின்என்ஜின்களும், பெட்டிகள்முதலியனவும தண்டவாளத்தை விட்டு இறங்குவதன் விளைவாக எதிர்காலத்தில் றெயில்வேவிபத்துகள் நடைபெருமல் தவிர்ப்பதற்காகப் "பப்கட்ஜெற்" என்ற ஓர்புதியசாதனத்தை உபயோகிக்கவேண்டுமென்று தென்னிந்தியறெயில்வேஊழியர்சங்கத்தினர் திருச்சிக்கிளையானது றெயில்வே மந்திரிக்கும், தென்னிந்திய றெயில்வே மனேஜருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு தாண்டவன் வெளித்தபால்

**பரிசுத்த அன்னைக்கு நிந்தைப் பரிகாரம்:**

பௌத்தபிக்குஒருவர் எழுதிவெளியிட்ட பிரசுரத்தினால் பரிசுத்த தேவதாயாருக்குநேர்ந்த நிந்தைஅவமானங்கட்குப் பரிகாரஞ்செய்து, விசுவாசிகளின் நேசத்தையும், வணக்கத்தையும் மாதாவுக்குப் பகிரங்கமாகக் காட்டும்பொருட்டுத் தாண்டவன் வெளி, பரிசுத்த வியாகுலமாதா ஆலய பங்குவிசாரணையைச் சேர்ந்த மக்கள் கட்டளைக்குரவர்வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியவர்கள்தலைமையிலே சமீபத்தில்ஒன்றுகூடி ஓர் நிந்தைப்பரிகாரவாரத்தை அனுட்டித்துத் தங்கள் செப, தப, தானதருமங்களைப் பிரசித்தமாக ஒப்புக்கொடுத்தனர்.

பரிகாரவாரத்தின் முழுநாட்களிலும் காலைமாலை ஆராதனைகளில் பங்கைச்சேராதமக்கள் பங்குபற்றித் தங்கள் நேசத்தின்மூலம் தேவதாயாருக்கு ஏற்பட்டஅவமானத்துக்கு நிந்தைப்பரிகாரஞ் செய்தனர். பிள்ளைகளின்தினமன்று இப்பங்கிலும், மற்றும் அயற்பங்குகளிலுமுள்ள பிள்ளைகள்எல்லோரும் ஒன்றுகூடி, அன்று காலை பாடற்பூசைகண்டு, தேவவிருந்தருந்தித் தேவதாயை மகிழ்வித்தனர். பின்னர் சிலுவைப்பாதைசெய்து ஒப்புக்கொடுத்தனர்.பிற்பகல்மெழுகுவர்த்தியுடன் தேவதாயின் திருச்சுரூபத்தைச் சர்வாலங்காரங்களுடனும் எழுந்தருளச்செய்து, பெரியசுற்றுப் பிராகாரம் செய்தனர். சுற்றுப்பிராகாரவேளையிலே செபமாலை, பிரார்த்தனை சொல்லித் தோத்திரகீதங்கள் பாடி ஒப்புக்கொடுத்தனர். பெற்றோரின் தினமன்று எல்லாப்பெற்றோரும் இரவுமுழுவதும் விழிப்பிருந்து, செபங்களும், செபமாலை பிரார்த்தனைகள்சொல்லியும், தோத்திரகீதங்கள் பாடியும் ஒப்புக்கொடுத்தனர்.

பரிகாரவாரம்முழுவதும் மாலைஆராதனைகளில் பலபங்குகளைச்சேர்ந்த குருப்பிரசாதிகள் சமுகமீந்து, "தேவதாயின் மகத்துவம்"பற்றிப் பிரசங்கங்கள்செய்து தேவதாயை மகிமைப்படுத்தினர். பரிகாரவாரத்தின் இறுதி நாளன்றுகாலை கட்டளைக்குரவரால் இருபலிபூசைகளும் தேவதாய்க்குத் தோத்திர பாட்டுப்பூசைகளாக நிறைவேற்றப்பட்டன. விசுவாசிகள் இருபூசைகளிலும்பங்குபற்றித் திருவிருந்தருந்தித் தேவதாயை மகிமைப்படுத்தி,

"ஓ மரியாயே! சிலுவையில் நிந்திக்கப்பட்ட உமது மகனைப்போல் நீரும்ஆனீரே, பாவிகளாயிருக்கிற நாங்கள் உமக்கு நிந்தைப்பரிகாரம் செய்கிறோம். மாசில்லாத லீலிமலரே! எங்கள் தளராதநேசத்தையும் பிரமாணிக்கத்தையும் உமக்கு ஒப்புக்கொடுப்போமென உறுதிப்படுத்துகிறோம்."

என்னும் பிரதிக்கினைச்செபம் கட்டளைக்குரவராலும், விசுவாசிகளாலும் பகிரங்கமாக ஒப்புக்கொடுக்கப் பட்டது.

**அர்ச். சவேரியார் சேவாசங்க 4-வது ஆண்டுவிழா:**

மட்டக்களப்பு, தாண்டவன்வெளி பரிசுத்த வியாகுலமாதாகோயில் பங்கைச்சேர்ந்த அர்ச். சவேரியார் சேவாசங்க அங்கத்தினர் தங்கள்திருநாளன்று சங்கத்தின் 4-வதுஆண்டு பூர்த்திவிழாவைக் கொண்டாடினர்.

திருநாளுக்குமுந்திய ஒன்பதுநாட்களிலும் நவநாள்உற்சவம் நடாத்தி, முடிவுதினம் ஒருசந்தியாய் இருந்து அன்றுபிற்பகல் 6-30 மணிக்கு மாலை ஆராதனையும், சுற்றுப்பிராகாரமும் நடத்திவைத்தனர். திருநாளன்று காலை பாடற்பூசையும், பூசைக்குப்பின் ஆசீர்வாதமும் நடைபெற்றுச் சங்கவளர்ச்சிக்காக விசேஷசெபங்கள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. பூசைவேளை அங்கத்தவர்களெல்லாம் திருவிருந்தருந்தினர்.

அன்றுபிற்பகல் 6மணிக்குத் தேநீர் விருந்தில் கலந்துகொண்டபின் கடவுள்வணக்கத்துடன் கூட்டம்ஆரம்பமானது. சகோதரர் எஸ். ஈ. பெர்னண்டோஎன்பவர் கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமிகளிடம் வாக்குறுதிகொடுத்துச் சங்க அங்கத்தவராகச் சேர்ந்துகொண்டார். பின்வழமைபோலக் கூட்ட அறிக்கைகள், வரவுசெலவுக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாய் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதன்மேல் புதியவருட உத்தியோகஸ்தர் தெரிவுசெய்யப்பெற்றனர். தற்காலிகதலைவராக விருந்தினர் திரு. யோஸ் ஜே. டேவிற் (திரிகோணமலை மேற்றிராசன கத்தோலிக்க ஐக்கிய சங்கதலைவர்) அவர்கள் தலைமைதாங்கினர்.

உத்தியோகஸ்தர்கள், தலைவர்: சகோதரர் எஸ். சவரிராசா. உபதலைவர்: சகோதரி மேரி பெஞ்சமின். காரியதரிசி: சகோதரர் எஸ். ஈ. அன்ரனி. உதவிக்காரியதரிசி: சகோதரி ஜே. ஞானம்மா. தனாதிகாரி: சகோதரர் ஜீ. இம்மானுவேல் என்பவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஈற்றில் இச்சங்கம்ஆற்றிய தொண்டுகளைப்புகழ்ந்து, இப்பங்கு வேதவிசுவாசம்செழிக்கும் பங்குஎனத் திரு. யோஸ் ஜே. டேவிற்அவர்களும், திரு. கே. எல். இராஜேந்திரமும் (தி. மே. க. ஐ. ச. காரியதரிசி) வெகுவாகப் பாராட்டிப்பேசினர். பின்னர் கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமிகள் சங்கம் கடந்தகாலத்தில் செய்தசேவைகளைப் பாராட்டிப் பேசி, இனிமேலுந் தொடர்ந்து பெருஞ்சேவைசெய்ய வேண்டுமென ஆசித்து, விருந்தினராகவந்து தம்மையும், சங்கத்தையும் கௌரவித்த திரிகோணமலை மேற்றிராசன கத்தோலிக்கஐக்கியசங்கதலைவர் திரு. யோஸ் ஜே. டேவிற்என்பவருக்கும், அச்சங்ககாரியதரிசி கே. எல். இராஜேந்திரம் என்பவருக்கும் நன்றிகூறினர். ஈற்றில் கடவுள்வணக்கத்துடன் விழா இனிதே முடிவுபெற்றது.

— நிருபர்

# நடுச்சாமம்

— 'கவி' —

மரியாளும் காலயர்ந்து களைத்து நின்றாள்
மாதவனும் மக்கள்மனை தோறுஞ் சென்று
அரிதான இவ்விரவில் சிறிது தங்க
ஆருதவி செய்வீர்கள் என்று கேட்டார்
பெரிதான வேறிடத்தைப் பாரு மென்றார்
பேசாது கவலையுடன் திரும்பு கின்றார்
இருள்வேளை மனைவிநிலை இரண்டும் வாட்ட
ஏங்கிநிலை கலங்குகின்றார் ஐயோ பாவம்!

●

கூதலொடு குளிரேறு மாரி காலம்
கொடுவிலங்கும் நடுநடுங்கும் கொடிய காலம்
நாதனொடு குடிமதிப்பு எடுக்கும் காலம்
ஞானகங்கை ஊற்றெடுக்கும் நல்ல காலம்
ஆதிபரன் அவதாரம் எடுக்குங் காலம்
அன்னைமரி யுடல்நோவு மிஞ்சுங் காலம்
சேதமின்றி விலங்குகளும் உறங்கும் காலம்
செம்மலொடு தங்குநடுச் சாம காலம்.

●

மாதவனும் அவளருகே பலவா றெண்ணி
மனம்நொந்து கண்ணயரா திருக்க வைக்கோல்
மீதவளும் சாயும்போ துதரம் நோக
விண்மீன்கள் வானத்தில் ஒளியும் குன்றக்
காதலொடு தனதுதிருக் குழந்தை மீது
கருத்தூன்றி வேதனையெல் லாமம றந்து
மாதவளும் பெற்றெடுத்தாள் வையம் போற்றும்
மாசற்ற எம்பெருமான் யேசு தன்னை.

●

பட்சியினம் குளிர்பிடித்துச் சத்தம் கூட்டில்
படுத்துறங்கா மிருகங்கள் இரையும் காட்டில்
கட்சியினம் வாதாடிக் கதைப்பர் வீட்டில்
கண்துஞ்சாக் கலவரங்கள் செய்வர் நாட்டில்
முட்டியுறை செம்மறிகள் ஒதுங்கும் மேட்டில்
முழுவிரவும் ஆயரது கண்கள் ஆட்டில்
தொட்டிலுறை மாமரியாள் பெற்ற செல்வம்
தொழுவானோர் கண்களுக்கே தோன்றிற் றம்மா!

●

அப்போது ஆயரிடம் வானோன் சென்று
அயற்குகையில் இரட்சகரும் பிறந்தார் இன்று
இப்போது போய்ப்பாரீர் கந்தை சுற்றி
இனிதுறங்கும் மாமரியாள் ஈன்ற முத்து
தப்பாது ஆயரெலாம் எழுந்து நேரே
தங்குகுகை தனிற்கண்டு மெய்ம்ம றந்தார்.
செப்பாது கரங்குவித்து முழந்தா ளிட்டுத்
திவ்வியபா லகன்தன்னை வணங்கி னரே.


வெளிவந்து விட்டது!
சிவக்கொழுந்து - மஹாதேவன் இயற்றிய
**1. உயர்தர எண்கணிதம்**
G. C. E. பரீட்சை, ஆசிரிய கலாசாலைப் பிரவேசம்,
ஆசிரிய பயிற்சிப் பரீட்சை ஆதியவற்றிற்காயது.
சிறந்த விளக்க முறைகள்! — நூற்றுக்கணக்கான அப்பியாசங்கள்!
மணிக்கூட்டுக் கணக்குகள்! — பந்தய ஓட்டங்கள்!
மடக்கை அல்லது லாகிரிதம்! — பலஇன அப்பியாசங்கள்!
பரீட்சைப் பத்திரங்கள் ஆதியன பொருந்தியது.
விலை ரூபா 4-00
**2. உலக பூமிசாஸ்திர விளக்கம்—ரூபா 7-75**
G. C. E. வகுப்புகட்கு
அக்ஷர, கேத்திர கணிதங்களும் விரைவில் வெளிவரும்.
பிரசுரம்:
**வடலங்கா புத்தகசாலை**
**பருத்தித்துறை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பக் கல்வி

**உளநூலும் — கற்பித்தலும்**

ஆக்கியோன்:
திரு. P. சவரிமுத்து,
M. A., Dip. Ed., F. C. P. (London)

ஆசிரியர்களுக்கும்
பயிற்சிபெறும் ஆசிரியமாணவர்க்கும்
மிகவும்அருமையான ஓர்கை நூல்.
எளிய நடையில்
பரந்தஅறிவை அடக்கியுள்ளது.

**விலை ரூபா 4.**

தொகையாக வாங்குபவர்களுக்கு
விசேஷகழிவு கொடுக்கப்படும்.

**மனேஜர்,**
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

நவாலி
1. நாகமுத்தி கந்தையாவும்,
2. பெண் பொன்னம்மாவும்.

— வழக்காளிகள்.

**இல. M. B. 970**

### எதிராக

காலஞ்சென்ற யாழ்ப்பாணம், சுண்டிக்குளி சந்தியாகோ செபஸ்தியாம்பிள்ளையும், பெண் கத்தறீனுமாகிய இவர்களின் பிரதி யாழ்ப்பாணம், சுண்டிக்குளி செபஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை, தற்போது இறிகேசன்ஆபீஸ் கொழும்பும், மறுபேரும் — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 970-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1957-ம்ஆண்டு தைமாதம் 29-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல்வட்டி ரூபா 3401|50-உம் இதற்குத் தீர்வைத் திகதிதொடக்கம் ரூபா 2000க்கு 9 வீத வட்டி 14-5-56 தொடக்கம் 26-9-56 வரைக்கும். அதன்மேல் முழுத்தொகைக்கும் 26-9-56 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5வீதவட்டி. கோட்டுச்செலவு விற்பனவுக்குமுன் அறிவிக்கப்படும்.

### காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சுண்டிக்குளியும், சிவியாதெரு இறையும். "பயத்தம் தோட்டம்" பர. நிலை. இலா. 18. ஆனால், அளவின்படி பர. நிலை. இலா. 17, குளி $3\frac{3}{4}$-உம், அதைச்சேர்ந்தவைகளும். இந்தச்சொல்லப்பட்ட காணிக்குள் துண்டு (1) ஒன்று என்று பிரிக்கப்பட்ட பர. நிலை. இலா. 2 குளி 17-உம் T. D. வீரசிங்கம் உலாந்தா 1948-ம்ஆண்டு ஆடிமாதம் 29-ந் திகதி விஸ்தரித்தபடம் No. 2494-இன்படி துண்டு (1) ஒன்று வீடும், கிணறும் மற்றும் அதைச்சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — தியோகுப்பிள்ளைக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு — V. A. திரையப்பாவின்ஆதனம். மேற்கு — ஒழுங்கை. தெற்கு — D. A. தம்பிராசாவுக்கும், பெண் ரோசலினுக்கும் உரியஆதனம். 2-ம் இலக்கத்துண்டு இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

51, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
11-12-56


**DO YOU WISH TO BE TRAINED AS A:—**

**Mechanic,**
**Electrician,**
**Mechanised Wood Worker**
**Metal Worker.**

Write giving particulars of education and aptitude with a stamped envelop.

**The Arunothia Youth Service,**
**KILINOCHCHI.**


## கமக்காரரின் கவலை

இம்முறையும் காலமழை போதிய அளவு பெய்துகொடாததால் மன்னார்—மாதோட்டப்பகுதிக் கமக்காரர் பெரிதும் மனமடிவுற்றவர்களாய் வானத்தைப்பார்த்தபடியே கருணையங்கடலின் கருணைமழைபொழிவது எக்காலம்! நெற்பயிர்கள் வளர்ந்து உணவுப் பஞ்சத்தை அகற்றுவது எக்காலம்! என்று அங்கலாய்ப்புடன் இருக்கின்றார்கள். சென்ற கார்த்திகைமாசம் 13-ந்திகதி பெய்த பெருமழையின்பின் இன்னுமே ஓர்நல்லமழை பெய்துகொடுக்கவில்லை. மழைக்கோலந்தானும் காணப்படவில்லை. அம்மட்டா! இந்நாட்டின் பெரியகொடையாகிய கட்டுக்கரைத்தடாகமும் இந்தமாரிகாலத்தில்தானும் போதியநீரைக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அதன் கேவலநிலையே கமக்காரருக்குப்பெரும் மனக்கலக்கத்தைக் கொடுக்கின்றது. நல்லமழை பெய்வதெப்போ! உழவர் உளங் களிப்பதெப்போ! நெற்பயிர்கள் செழித்து வளர்வதெப்போ! என்று உழவர்கள் நெட்டுயிர்த்து நிற்கின்றார்கள்.

## கத்தோலிக்க சேவையும் கத்தோலிக்கரும்

அர்ச். அந்தோனியார் கூட்டத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களின் கூட்டம் ஒன்று சென்ற 16-12-56 ஞாயிறு மாலை 5-30மணியளவில் அர்ச். அந்தோனியார்கூட்டச்சாலையில் வண. எல். ஆர். அன்ரனிசுவாமியவர்கள் தலைமையில்நடந்தேறியது. அதிலே திரு. பி. சவிரிமுத்துஅவர்கள் "கத்தோலிக்க சேவை என்னும்விஷயம்பற்றி ஓர் சொற்பொழிவுநிகழ்த்தினர். கத்தோலிக்கசேவையில்அடங்கிய இருமுக்கிய அம்சங்கள், ஒருஅங்கத்தவரின் ஆத்துமஈடேற்றமும், பிறரின்இரட்சணிய வேலையாகுமென்று விளக்கினர். நெருப்பில்இடப்பட்ட இரும்பு எவ்வாறு நெருப்புமயமாகிச் சூட்டையும், வெளிச்சத்தையும் வெளிவீசுகிறதோ அவ்வாறே ஒவ்வொரு கத்தோலிக்க சேவையாளரும் தன்விசுவாசவெளிச்சத்தையும், அனலையும் பரப்பவேண்டுமெனவும் கூறினர். மேலும் ஒரு இரும்புக்கம்பி காந்தத்தன்மை பெற்றதும் மற்றஇரும்புக்கம்பிகளைத் தன்வசம்இழுப்பதுபோல் ஒருகத்தோலிக்க சேவையாளனும் தன்பால் பிறகத்தோலிக்கரையும், பிறசமயத்தவரையும், கவரவேண்டுமென்று கூறினர். அதன்மேல் எவ்வெத்துறைகளில் கூட்டஅங்கத்தவர்கள் கத்தோலிக்க சேவை செய்ய முடியுமென்று சுருக்கமாக எடுத்துக்கூறிச் சொற்பொழிவைமுடித்தனர். மூப்பர் டீ. யேம்ஸ், தலைவர் சுவாமிஅன்ரனி ஆகியஇருவரும் பேச்சாளருக்கு நன்றிகூறினர்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

எனது தகப்பனர் மரணத்துக்கேதுவான நோய்கண்டு வருந்தும்போது அர்ச். பத்தாம் பத்திநாதரின்சலுகையை இரந்துமன்றுடியதன்பயனுக அவர் நல்லசுகமடைந்தார். அவரின் நாமம் உலகம்எங்கும் புகழப்படுவதாக.

யாழ்ப்பாணம் M. A. S.

* * *

அர்ச். சூசையப்பர், அந்தோனியார், தியோகு, செபஸ்தியார், சவேரியார், ஹெலனம்மாள் இவர்களிடம் மன்றுடிக்கேட்டபடி எங்கள் மகள் S. S. C. பரீட்சையில் தேறியிருப்பதுடன், சிலகாலமாய்ப் பீடிக்கப்பட்டிருந்த குடல்நோயினின்றும் சொஸ்தமடைந்திருக்கின்ருள். இவர்களின் நாமம் எங்கும் புகழப்படுவதாக.

பேசாலை Mrs. L. M. செபமாலை

● பிரான்சீஸ்கன்சபையை அடியிட்டவரான அர்ச். பிரான்சீன் அசீஸியார் பரமபதமடைந்த 730-ம்ஆண்டு நிறைவுவிழாவை அசீஸிநகர் சமீபத்திலே கொண்டாடியது. இந்தக்கொண்டாட்டம் அவரின் திருநாளாகிய ஐப்பசி மாதம் 4-ந் திகதிக்கு முந்தியதினம் ஆரம்பமாயிற்று.

● உலகின் மிகப்பிரமாண்டமான கோவில்களில்ஒன்ருய் லிவர்ப்பூல் நகரிலே 40,00,000 பவுண்செலவில் கட்டியெழுப்பப்பட்டுவந்த கிறீஸ்துஇராசா ஆசனக்கோவில்திருப்பணி யுத்தங்காரணமாக நிறுத்தப்பட்டிருந்து, பதினன்கு வருடங்களுக்குப்பின் திரும்பவும் தொடக்கப்பட்டு அதன்நிலவறை இப்போது பூர்த்தியடைந்திருக்கிறது.

● தேவஅழைத்தல்களை அதிகம் விருத்தியாக்குமாறு இத்தாலிய மேற்றிராசனங்கள்சில விசேஷ காரியாலயங்களைத் திறந்துகொண்டுவருகின்றன. குருத்துவஅழைத்தலுக்கு அதிகமான இளைஞர்களைக் கவர்ந்துகொள்ளுமாறு கையாடும்உபாயங்களில் ஒன்ருக இத்தாலிய மேற்றிராசனங்கள் எல்லாவற்றிலும் "குருமட தினம்" அனுசரிக்கப்பட்டு வருகிறது.


செகமீட்பராகிய திவ்வியபாலனின்

## நவதின உற்சவம்

நத்தால்திருநாளைப் பூச்சியபயபக்தியுடன் கொண்டாடஉதவியான நோவனைத் தியானங்களும், செபங்களும், திவ்வியபாலனின் பிறப்பைச்சார்ந்த ஆசைகள், புகழ்ச்சிகள், பிரார்த்தனைகளும் அடங்கியது.

விலை: 75 சதம்.
தபாற்செலவு 12 சதம்


* * *

## விளம்பர விகிதம்

| | ரூ. | ச. |
|---|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் ... | 2 | 00 |
| மரணஞாபகம் ஒரு அங். ... | 2 | 00 |
| ஓடர் நிசி (Order Nisi) இரண்டுமுறைக்கு ... | 10 | 00 |

மற்றும் விளம்பரங்களுக்குக் கடிதமூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

**மனேஜர்,**
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## இளவாலைப் பிரலாப மரணம்

வவுனியாவைத் தனது செனனபதியாகக்கொண்டவரும், கடந்த 30ஆண்டுகளுக்கு மேலாக இளவாலையில்வசித்து வந்தவரும், இளவாலை, அர்ச். என்றியரசர் கல்லூரித் தலைமைஆசிரியராயிருக்கும் ஆசிரியர் திரு. ஏ. எஸ். யேமிஸ்அவர்களின் பாரியாருமாகிய ஸ்ரீமதி பாக்கியம் றெஜீனம்மாஅவர்கள் கடந்த வியாழக்கிழமை (29-11-56) மாலை சடுதியிலேற்பட்ட 'ஆஸ்மா' நோய்காரணமாக மூளாய் வைத்தியசாலையில் மரணத்திரையுள் மறைந்தார் எனும் துயரசெய்தியால் யாவரும்துக்கசாகரத்தில் அமிழ்ந்தலாயினர். மரிக்கும்போது இவருக்கு வயது 39.

மறுநாள் இவருடைய சடலம், அழகிய சித்திரப்பேழையில் வைக்கப்பெற்று, கல்லூரிமாணவர்களும், ஆசிரியர்களும், கன்னியர்மடத்துமகளிரும், இளவாலையிலும், பிறவூர்களிலும் இருந்து வந்த அன்பர்களும், சுற்றத்தவரும், பிறருமாகப் பன்னூற்றுக்கணக்கானோர் கொடிபோலத் தொடர்ந்துசெல்ல, முப்பதுக்குமேற்பட்ட கன்னிகாஸ்திரிகளும், குருமாரும் பின்செல்ல, அதிவண. கட்டளைச் சுவாமியாரும், கல்லூரிஅதிபர் வண. எல். ஏ. சிங்கராயர்சுவாமியாரும் துக்கசங்கீதம்பாடச் சந்தாபங்களின் மத்தியில் கல்லறையில் நல்லடக்கஞ் செய்யப்படலாயிற்று.

ஸ்ரீமதி யேம்ஸ்றெஜீனம்மாஅவர்கள் அருங்குணமலர்கள் செழித்த ஒருபூஞ்செடி. தெய்வபக்தியும், அடக்கமான வாழ்வும், கிறீஸ்துவ மாதருக்கணிகலமான உயர்ந்தகுணங்களுங் கொண்டு எறும்புக்கும் தீமைசெய்யாத நல்லுள்ளத்தோடு வாழ்ந்துவந்த் உத்தமி. ஆறு குழந்தைகளும், அருமைக்கணவனும் கண்ணீர்வடிக்க "மாதாவுக்குக்காணிக்கையாகச் செல்லுகிறேன்" என்று வாய்விட்டுக்கூறி இவ்வுலகவாழ்வைநீத்தார். சமீபத்தில் நடைபெற்ற ஞானவொடுக்கத்தில் அவ பங்குபற்றியவிதத்தையும், அவவுக்கேற்பட்ட நல்மரணத்தையும்குறித்துக் கட்டளைச்சுவாமியார்கூடக் கவலைப்படலாயினர்.

வவுனியாவில் பிரபலம்பெற்ற பாவிலுப்பிள்ளை அவர்களின் சிரேஷ்டபுதல்வியாகிய இவருக்கு நான்கு சகோதாருளர். மன்னர் சுகாதார சேவைப் பகுதியில் லிகிதராயிருக்கும் திரு. செல்லக்கோனின் பாரியாராகிய திருமதி செபரட்னம்அவர்களும், கரையூர் அர்ச். யேம்ஸ் கன்னியர்மட ஆசிரியையான சிஸ்றர் அல்போன்சாஅவர்களும், நாரைட்டான் கிராமாபிவிருத்தி அதிகாரியாகிய திரு. பி. பெனடிக்ற் அவர்களும், கொழும்பில் இரக்குவான்யங் கம்பனியில் உத்தியோகம் பார்க்கும் திரு. ஏ. செல்வநாயகம் அவர்களின் பாரியாராகிய லில்லி புஷ்பம் அவர்களும் இவருடைய சோதரர்களாம்.

இவரைப்பிரிந்து துயருறும் அருமைக்கணவரோடும், அன்புமக்களோடும், ஆசைத்தாயாரோடும், சகோதரரோடும், நாமும் அனுதாபப்படுகிறோம். அவருடைய ஆன்மா சமாதானத்தில் இளைப்பாறுவதாக.

— நிருபர்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 20-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனித வீரர்



## அண்ணு சொல்லுவது

அருமைச் சகோதரங்களே !

ஐந்து நாட்களுக்குப்பின் தேவபாலன் பிறந்த கிறிஸ்மஸ் பண்டிகை. இத்தினத்தை எவ்விதம் கொண்டாட வேண்டுமென்று யோசித்துக்கொண் டிருப்பீர்கள். வெடி, வாணவேடிக்கை, பலவகைத் தின்பண்டங்கள், புதுஉடுப்புகள் என்று பலவாறு எண்ணிக்கொண் டிருக்கிறீர்கள். இது எல்லாம் கிறீஸ்துவின் பிறப்புக்கல்லவா? ஆகையால், கிறீஸ்துஇன்றி, கிறிஸ்மஸ் இல்லையென்பது விளங்குகிறதா ?

தேவசுதன் மனிதனுய்ப் பிறந்து தமது நேசத்தை எங்களுக்குக் காண்பித் திருக்கிருர். எம்முடைய அன்பைத் தேடிவந்திருக்கிருர். இவ்விழாவில் விசேஷமாய் நடுச்சாமப் பூசையில் திவ்விய சற்பிரசாதம் உட்கொண்டு உங்கள் அன்பைப் பாலயேசுவுக்குக் காட்டுங்கள். அது உங்கள் மனதிற்குச் சந்தோஷத்தைத் தரும். யேசுவுக்கும் மகிமையை உண்டாக்கும்.

யேசு எங்களை இரட்சிக்க வந்தநாளிது. அவருடைய நேசத்தை நினைத்து நாம் பிறருக்கு அன்புகாட்ட வேண்டும். கிறிஸ்மஸ் திருநாளைச் சந்தோஷமாகக் கொண்டாட முடியாமல் எத்தனையோ சிறுவர் இருக்கிருர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு சிறுவனையோ, சிறுமியையோ உங்கள் வெகுமதிகளால் சந்தோஷப் படுத்துங்கள். அயல் வீட்டில் அல்லது உங்கள் கிராமத்தில் அல்லது ஆஸ்பத்திரியில் உள்ள ஏழைச்சிறுவன் ஒருவனுக்கு உங்களிடமுள்ள நல்ல உடுப்பு ஒன்றைக் கொடுக்கலாம் ; அல்லது விளையாட்டுப் பொருளைக் கொடுக்கலாம்; வீட்டிற்கு அழைத்துவந்து சாப்பாடு கொடுக்கலாம் அவனுடன் விளையாடலாம். இப்படிச் செய்து அவனை மகிழ்வித்தால் அதைஎல்லாம் யேசுகண்டு சந்தோஷப் படுவார். ஏனெனில், அந்த ஏழைச்சிறுவனுக்குச் செய்தது அவருக்குச் செய்தது ஆகும்.

ஈற்றில் எமது அச்சகத்தலைவர், நண்பர் "புனிதவீர"னுக்கு விஷயதானஞ் செய்வோர் அனைவருக்கும் தேவபாலனின் அருளும், ஆசிநிறைந்த புதுவருட சோபனமும் கூறுகிறேன்.

உங்களன்புள்ள,

அண்ணு

---

## என்றும் ஒன்றிவாழுவோம்

— ஜெயம் —

பூவிலந்த ஏவைசெய்த
பாவம்போக்க வந்தவன்
பொங்குமின்ப ஞானமார்க்க
அன்புகாணத் தந்தவன்.
ஆவிதன்னை மைந்தருக்கு
அர்ப்பணித்த அற்புதன்
அன்னையான கன்னிமேரி
ஈன்றளித்த பொற்சுதன்.
காவியங்கள் ஓதுகின்ற
கற்பனைக்கெட் டாதவன்
கரையிலான் தனைப்பயந்த
தாய்சொலைத் தட்டாதவன்.
ஓவியத்தின் தூயபாதம்
என்றுமொன்றி வாழுவோம்
ஒழிவிலாத துயரடர்ந்த
உலகைவென்று ஆளுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வளித்த நத்தால் திருநாள்

அன்று நத்தால்திருநாள். சாந்தியும் மணியும், மேரியும் சகோதரங்கள். அவர்களும் தங்கள் சின்னக்குடிசையிலே திவ்விய பாலனின் பிறப்பைக் கொண்டாட எண்ணினார்கள். எண்ணினாலும் வெறுங்கை முழமிடுமா? அவர்களது தந்தை பட்டாளத்திலே நல்ல உத்தியோகம் வகித்தவர். சண்டைக்காக அயல்நாடுசென்ற அவர் திரும்பிவரவேயில்லை. அவரிடமிருந்து எவ்விததகவலும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதனால், அவர்களது அன்னை மரியம்மா அப்பம்சுட்டும், தையல்வேலைசெய்தும் தனது பிள்ளைகளைக் காப்பாற்றி வந்தாள்.

சின்னஞ்சிறு பிள்ளைகள் நத்தால்திருநாளிலே புதிய ஆடைகள் அணிந்து, அத்திருநாளை நன்கு கொண்டாட விரும்புவது இயல்பே. அதற்கு மரியம்மாவின் பிள்ளைகள் விதிவிலக்கல்ல. அவர்களில் பெரியவள் சாந்தி. அவள் தனது அன்னைக்குத் தொந்தரவுகொடுக்க எண்ணாவிடினும் அவளது குழந்தையுள்ளம் நத்தாலைநன்றாகக் கொண்டாட விழைந்து நின்றது. மணியும், மேரியும் தாய் மரியம்மாளைப் புத்தாடைகளும், பலவித பலகாரங்களும், பாலன்பிறப்பிற்கான பொம்மைகளும் வாங்கித்தரும்படி அழுது கேட்டனர். அவள் தனது பிள்ளைகளுக்குத் தேறுதல் கூறினாள். உன்னத தேவனின் குமாரனாகிய திவ்வியயேசுவின் பிறப்பினால் உன்னதங்களில் தேவனுக்குமகிமையும், இவ்வுலகத்தினருக்கு இன்பசாந்தியும் கிடைக்கும். ஆதலினால் எமக்கும் இன்பசாந்தி கிடைக்க இன்றுகாணும் நத்தால்பூசையை ஒப்புக்கொடுங்கள் எனக்கூறினாள். குழந்தைகள் ஓரளவு சமாதானம் அடைந்தவர்களாய் இன்று நாம் திவ்வியபாலனை நன்குமன்றாட வேண்டும்என எண்ணினார்கள்.

அச்சிற்றூரிலே அன்னம்மா ஓர்பணக்காரி அவள் தனது பிள்ளைக்கு அழகிய பட்டுத் துணிஎடுத்து மரியம்மாவிடம் தைப்பதற்குக் கொடுத்திருந்தாள். மரியம்மா அழகிய உடுப்புத்தைத்து அன்னம்மாவிடம் கொடுப்பதற்காகவைத்துவிட்டு வெளியேசென்றாள். அப்போது மேரி அந்த உடுப்பை எடுத்தாள். அது அழகானதாய் இருந்தது. அவளை அறியாமலே அதனை அணிந்துகொள்வதற்கு ஆசை ஏற்பட்டது. அதனால்மேரி உடனே உடுப்பை எடுத்தணிந்தாள். அந்நேரத்திலே அன்னம்மா அங்கே வந்தாள். அன்னம்மா தனது மகளுக்கான உடையை மரியம்மாவின் மகள் மேரி அணிந்திருப்பதைக்கண்டு அதிக ஆத்திரமடைந்தாள். மேரியையும், மரியம்மாளையும் பலவாறு ஏசினாள். அரைக்காசுக்கு வழியற்றவர்களுக்குப் பட்டாடைதான் பாக்கிஎனத் தூற்றினாள். அதோடுமட்டும் நில்லாது அந்தஉடையை எடுத்து மரியம்மாவின் முகத்திலே எறிந்து, மறுநாளே வேறோர் பட்டுச்சீலை வாங்கித்தரவேண்டும் என்றும் பணித்தாள். அன்றேல் அவளுக்கு ஆவன செய்ய அன்னம்மாவிற்குத் தெரியும்எனவும் வீரம்பேசினாள்.

"பட்டகாலிலேயே படும், கெட்டகுடியே கெடும்" என்பதற்கிணங்க வறுமையின்மேல் வறுமையாக வாடியிருக்கும் மரியம்மா பட்டுச்சீலை வாங்குவதற்கு வழியறியாது திகைத்தாள். பட்டுச்சீலை வாங்குவதற்கான பணத்தை எங்கேதேடுவாள்? அவளுக்குப் பணமின்றேல் வாழ்வே சூன்யம்என்ற எண்ணம் மேலிட்டது. மேலும், அவளது துயரம்நிறைந்த வாழ்க்கையிலே துன்பம் அதிகரிக்கக் காரணமாயிருந்த மேரியை நன்றாக அடித்தாள். வேதனையின் காரணமாக மேரி "அம்மா, நான் வேணுமென்று சட்டையைப் பழுதாக்கவில்லை; அளவானதால் போட்டுப் பார்த்தேன். தெரியாமல் செய்தபிழையைப் பொறுங்கள்" எனக் கண்ணீர்ததும்ப அழுதாள். வறுமையின் கோரத்தால் வாட்டப்பட்டஉடலும், உள்ளமும் ஒருங்கே சேர்ந்ததனால் மேரியை நன்றாகத் தண்டித்து விட்டாள். பின்பு யாதுசெய்வதென்று அறியாது தனது கடினமனத்தைஎண்ணி அழுதுகொண்டே மகளைத்தேற்றினாள்.

அடித்தகையே அணைக்கும் என்பதற்கிணங்கத் தனதுமகள் மேரியை நன்குதேற்றினாள். அப்போது சாந்தியும், மணியும் பயத்தினாலே குடிசையின் ஓர்மூலையிலே நித்திரைசெய்தனர். மேரியையும் நித்திரை செய்யத் தாலாட்டினாள் அந்த ஏழைத்தாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பிறக்கப்போகும் திவ்வியபாலனே தனக்குத் தஞ்சம்என எண்ணி, கோயிலுக்குச் சென்று மிக உருக்கமாக வேண்டினுள். அன்று நடுநிசி நத்தால்பூசைக்குத் தனது பிள்ளைகளுக்கு, தான்அன்று துவைத்துக் காயவிட்ட சட்டைகளை அணிந்து கோயிலுக்குக் கூட்டிச் சென்ருள். அங்கு பிள்ளைகளுடன் சேர்ந்து தன்வாழ்வு வளம் பெற அப்பூசைப் பலியை ஒப்புக்கொடுத்தாள். பின்பு பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டாள். பிள்ளைகள் நித்திரை செய்தனர். ஆனுல், அந்த அபலைத்தாயின் உள்ளம்மட்டும் வேதனையால் வாடியது. விடியும்நேரத்திற்குச் சற்று முன்பே அவள் நித்திரையானுள்.

விடியுமுன் எழும்பும்தாய் அன்று காலை 8 மணிக்கும் எழும்பவில்லை. சாந்தியும், மணியும் தாய் எழும்பினுல் இன்னும் கோபப்படுவாள்என நினைத்து, முந்தியநாளில்மேரிபட்ட தண்டனையை நினைத்து, ஒன்றுமே பேசாது தண்ணீர் அள்ளுவதற்காகக் கிணற்றண்டை சென்றுவிட்டார்கள்.

மேரியும்எழுந்து தாயை எழுப்பப்பயந்து வெளியே வந்தாள். வீதிஓரத்திலே ஓர் பெரியமனிதர் கையிலே பலவித அழகான துணிகளைக் கொண்டுவந்தார். உடனே மேரி அவரைப்பார்த்து இன்றுஅம்மா சட்டை தைக்கமாட்டா எனக்கூறினுள். வந்தவர் தையற்காரியின் மகள்என்பதை அறிந்து கொண்டு ஏனம்மா எனக்கேட்டார். பணக்காரரின் துணிகளைத் தைத்தபின் தொட்டாலும் தோஷம்எனக் கூறினுள். பெரியமனிதருக்கு இவ்வார்த்தைகள் ஆச்சரியத்தை அளித்தன. குழந்தைகூறுவதன் அர்த்தம் என்னஎன அறியக் குழந்தையை மேலும் வினவினுர். குழந்தை பணக்காரியின் உடையை அணிந்ததும், அதனுல் தான் பெற்ற வசைச்சொற்களையும், தான்பெற்ற தண்டனையையும் விம்மிக்கொண்டே கூறினுள். ஓர் பணக்காரிக்காக எல்லாப் பணக்காரர்களுமே கூடாதவர்கள் என்றுகூறல் பிழையாகும்என்று கூறினுர். பின்னும் குழந்தையின்மேல் பரிவுகொண்டு, "உனது பெற்றோர், சகோதரங்கள் யாவர்" எனக் கேட்டார். தனது தாயின்பெயர் மரியம்மாஎன்றும், சகோதரிகளின்பெயர் சாந்தியும், மணியும்என்று கூறினுள். பெரியமனிதர் ஆவலுடன், "உனது அப்பா யார்?" என வினவினுர். "எனது அப்பா நான்பிறந்த சிலமாதங்களின்பின் எங்கள் எல்லோரையும் இங்கே விட்டுவிட்டு அயல்நாட்டிற்குச் சண்டைக்குச் சென்றவர் இன்னும் திரும்பிவரவில்லை. அவரதுபெயர் லெப்ரினன் சூசைப்பிள்ளை" எனக்கூறி முடிக்குமுன் பெரியவர் "மகளே மேரி" எனக்கூவி மேரியை வாரிஎடுத்தார். பெரியமனிதரின் கண்களிலே நீர்ததும்பிற்று. அவரது சிந்தனை ஆறுவருடங்களுக்கு முன்பு தான் அயல்நாட்டிற்குச் சென்றபொழுது விட்டுச்சென்ற மேரியின் தன்மையையும், மரியம்மாவின் ஏழ்மை நிலைமையையும் எண்ணி வியப்பும், துக்கமும் அடைந்தார். அப்பொழுது அருகாமையிலிருந்த ஜீப்காரிலிருந்து இறங்கிய இருபட்டாளவீரர் மலைபோன்ற எதிர்ப்பிலும் கண்கலங்காத லெப்ரினன் சூசைப்பிள்ளையின் கண்களில் நீர்கசிவதைக்கண்டு ஆச்சரியப் பட்டார்கள்.

மரியம்மா, மரியம்மா என்றகுரல் அந்த அபலைத்தாயை எழுப்பிற்று. மரியம்மா கண் விழித்துப் பார்த்தாள். கம்பீரமான தோற்றமும், அழகிய உடைகளும் அணிந்த மனிதர் கையிலே மேரியை ஏந்தியபடி நின்ருர். "மரியம்மா என்னைத் தெரியவில்லையா?" என்றகேள்வி அவள்கண்களை ஒளிபெறச் செய்தது. "நீங்களா?" என முணுமுணுத்து மேரியை அவரிடமிருந்து வாங்கியபொழுது ஒருதுளிகண்ணீர் அவர்கையிற் பட்டது. அப்பொழுது அங்கேவந்த சாந்தியும், மணியும் தங்கள் தந்தையைக்கண்டு அளவில்லா மகிழ்ச்சி எய்தினர்.

---

## மனந்திரும்பினுர்கள்

ஒரே கிராமத்தில் வசிப்பவர்களும், புத்த சமயத்தவர்களுமான இரண்டாயிரம் வியெற்னும் அகதிகள் அண்மையில் கத்தோலிக்க மதத்தைத் தழுவியிருக்கிருர்கள். அக்கிராமம் மனந்திரும்பக் காரணமாய் இருந்தவர் அவ்வூர்ப் புத்தகுருவாகும்.

அக்கிராமவாசிகள் ஒரு கோயிலும், குருமனையும் கட்ட ஆரம்பித்து விட்டார்கள். தற்பொழுது அங்கிருந்து விசாரணைசெய்பவரும் ஓர் அகதியாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பால் உயரலாம்

உலகில்சிலர் பணக்காரராகப் பிறப்பதும், பலர் ஏழைகளாகப் பிறப்பதும் இயற்கை. இது உலகநியதி. எல்லோரும் பணக்காரர்களாகப் பிறந்தாலும் அல்லது எல்லோரும் ஏழைகளாகப் பிறந்தாலும் உலகம் உருப்படமாட்டாது என்பதை நீ அறியாயா?

மண்ணில் மானிடராகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் வாழப்பிறந்தவர்கள். ஏழைக்கு வாழமுடியா தென்ருல் உலகம் தோன்றிய காலந்தொட்டுப் பிறந்த ஏழைமக்கள் அத்தனை பேரும் வாழாமலா இறந்தார்கள்?

காட்டிலே விறகுவெட்டிவிற்று வயிறு வளர்த்துவந்த தந்தைக்கு மகனுகப் பிறந்தான் ஆபிரகாம் லிங்கன். விளக்குக்கு மண்ணெண்ணெய் வாங்கக் கையில்கால்காசு இல்லாததால், வீதிவெளிச்சத்தில் வெற்றுடலோடு கடுங்குளிரைத் தாங்கமாட்டாது தாங்கித் தனது பாடங்களைப் படித்த ஆபிரகாம் லிங்கன் இறக்கும்பொழுது இன்றைய மாபெரும் அமெரிக்க வல்லரசின் ஜனதிபதியாக விளங்கவில்லையா?

இத்தாலிக்குத் தெற்கேயுள்ள கோர்ஷிக்காஎன்றதீவில் ஓர்ஏழைக்குடியானவனுக்கு மகனுகப்பிறந்த நெப்போலியன் ஐரோப்பாவையே — ஏன் அகிலத்தையே கிடுகிடுக்கவைத்து மாபெரும் பிரான்சிய ஏகாதிபத்தியத்தின் தலைவனுக விளங்கவில்லையா?

ஏழைச் சப்பாத்துத் தொழிலாளிக்குப் புத்திரனுக அவதரித்த யோசெவ் ஸ்ராலின் இறக்கும்பொழுது சோவியற்ருஷியாவின் தலைவனுக விளங்கவில்லையா?

பிளாட்பாரத்திலே செய்தித்தாள் விற்றுப் பிழைத்த தோமஸ் அல்வா எடிசன் இறக்கும்பொழுது புகழின் உச்சாணியிலே கொழிக்கவில்லையா?

இப்படியாக ஒவ்வொரு பெரியாரினதும் வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்ப்போமாயின் அவர்கள் ஒருகாலத்தில் எண்ணிலடங்கா இன்னல்களை அனுபவித்தார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்று தெற்றெனத் தெளிவாகும். ஆகவே, ஆராவது ஏழையாகப் பிறந்தமையையிட்டு மனச்சோர்வடையாது தனது இலட்சியத்தை அடையப் பாடுபடவேண்டும். உப்பரிகையிலே உல்லாசமாக உண்டுவாழும் பணக்காரரால் சாதிக்க முடியாத எத்தனையோ அரியபெரிய காரியங்களை நெற்றிவியர்வை நிலத்தில்விழக் காலைதொட்டுமாலைவரை கஷ்டப்பட்டுஉழைக்கும் ஏழைமகன் சாதித்துள்ளான் என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்ற தங்கமான முதுமொழியை மனதிற்கொண்டு ஊக்கமாக உழைத்து வர வேண்டும்.

---

மற்றவர்களுக்குக் கொதிப்பை உண்டாக்குகிறவர்கள் தாமே கையிற் சூடுபடுவர்.

உன் சீவியமாகிய நூலை இருசொற்கள் முடிக்கும். அந்நூலை எழுதும்பொழுது இது உன்மனதில் என்றும் இருக்கட்டும்.

பல அத்தியாயங்களோ அன்றேல் சிலபந்திகளோ தான்எழுதினுலும், முடிவு மேல்வருவது போலவேயிருக்கும். — அவன் இறந்தான்

* * *

ஒருபெண் வைத்தியரிடஞ் சென்று "வயதிற்குமுன் நரைத்துவிட்டஎன் தலைமயிரை என்னசெய்யலா?"மென்று கேட்டாள்.

அதற்கு வைத்தியர்: "பார்த்துப் பாராட்டலாம்" என்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org